# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 13 நவம்பர் - 2000 இதழ் - 11



அதிகாலையில் உமது கிருபையைக் கேட்கப் பண்ணும்,
உம்மை நம்பியிருக்கிறேன், நான் நடக்க வேண்டிய வழியை
எனக்குக் காண்பியும்...... சங்கீதம் 143:8

# அருமையான வாய்ப்பு

பரிசுத்த ஆவியானவரின் பணி (170 பக்கங்கள்) மற்றும் புதிய ஏற்பாட்டு ஆராதனை(112 பக்கங்கள்) ஆகிய நூல்கள், தரம் நிறைந்த தாளில் அழகாக அச்சிடப்பட்டு, மிக நேர்த்தியான முறையில் பைண்டிங் செய்யப்பட்டு,உங்களுடைய உபயோகத்திற்கு ஆயத்தமாக உள்ளது.

பிரசங்கிகளுக்கும், வேத ஆசிரியர்களுக்கும், வேத மாணவர்களுக்கும், சபை அங்கத்தினர்களுக்கும் மிகவும் பயனுள்ள ஒன்று.

புத்தகம் முற்றிலும் இலவசம். ஆனால், தபால் செலவு உங்களைச் சார்ந்தது. அனுப்பப்படும் தொகை அளவுக்கு புத்தங்கள் அனுப்பப்படும். அனுப்பவேண்டிய குறைந்தபட்ச தொகை ரூ.20/-


*தொடர்பு முகவரி:*

*தமிழ் உலக ஆத்தும ஆதாயத் திட்டம்*

*தபால் பெட்டி எண் 27,*

*காங்கயம்* - 638 701. இந்தியா


குறிப்பு: M.O. கூப்பனில் உங்கள் முகவரியைத் தெளிவாக எழுதவும்

## ஆசானின் அறிவுரையிலே...


| | | |
|---|---|---|
| 1. | ஆசிரியர் உரை | 01 |
| 2. | விசுவாசத்தினால் இரட்சிப்பு | 08 |
| 3. | பெண்கள் பகுதி | 11 |
| 4. | நியாயாதிபதிகள் ஒரு கண்ணோட்டம் | 14 |
| 5. | வாலிபர் பகுதி | 15 |
| 6. | வெளிப்படுத்தின விசேஷம் | 18 |
| 7. | தெரிந்து கொள்ளுங்கள் | 21 |
| 8. | நீங்கள் உங்களுடையவர்கள் அல்லவே | 24 |
| 9. | நமது குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது | 28 |
| 10. | இயேசுவின் குரலைக் கேட்போம் | 31 |

# THIRUMARAI AASAAN

**Published by Church of Christ**

**Editor**
**S. RAJANAYAGAM**

**Honorary Editor**
**J.C. CHOATE**

**Dharapuram Road, KANGAYAM - 638 701, Tamil Nadu, India**
**Pleading for the restoration of pure New Testament Christianity**

**Vol.13 November-2000 Issue - 11**

*ஆசிரியவுரை*

# கிறிஸ்துவின் வியாகுலம்

வருத்தம் , சஞ்சலம், துயரம் போன்றவை, மனிதனுடைய இப்பூமியின் வாழ்க்கையோடு நெருங்கிய தொடர்பு கொண்டவை. எனக்கும் அதற்கும் அல்லது எனக்கும் அவைகளுக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லையென்று, பூமியில் பிறந்த எந்தவொரு மனிதனும், சொல்லமுடியாது. அப்படி யாராவது சொல்லத் துணிந்தால், தயவு தாட்சண்யமின்றி நாம் அப்படிப்பட்டவனைப் பொய்யன் என்று முத்திரை குத்திவிடலாம். நம்முடைய தலைப்பில் இடம்பெற்றுள்ள **"வியாகுலம்"** என்ற வார்த்தை மேலே நாம் கண்ட வார்த்தைகள் தரும் பொருளைக் காட்டிலும், சற்று கூடுதலான அர்த்தம் கொண்டது.அநேகராகிய நாம் இவ்வார்த்தையை, நம்முடைய நடைமுறை வாழ்க்கையில் அதிகம் பயன்படுத்துவதில்லை. ஆயினும் இது பயன்படுத்தப்படவே படாத வார்த்தையென்று சொல்லிவிடமுடியாது.

"வியாகுலம்" என்ற இந்த விசேஷ வார்த்தை, புதிய ஏற்பாட்டில், வெகுசில இடங்களில் தான் பயன்படுத்தப்பட்டுள்ளது. முதல் மூன்று நற்செய்தியாளர்களும், அப்போஸ்தலன் பவுலும் இவ்வரிய வார்த்தையை தங்கள் நூல்களில் பயன்படுத்தியுள்ளனர். இதில் மத்தேயு, மாற்கு, லூக்கா போன்ற தேவமனிதர்கள் இவ்வார்த்தையை ஒரு குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் நடந்த சம்பவத்தை எடுத்துரைக்கும்படி பயன்படுத்தியுள்ளதால், அச்சந்தர்ப்பமும், அச்சம்பவமும் அதிகமான முக்கியத்துவம் பெறுவதோடு,"வியாகுலம்" என்ற இவ்வார்த்தையும் கவனமான கவனிப்பிற்கு ஏற்ற ஒன்றாக மாறிவிடுகிறது.

ஆம், நம்முடைய இயேசுவானவர், தான் காட்டிக்கொடுக்கப்படுவதற்கு முன், எருசலேமுக்கு அருகாமையில் இருந்த, கெத்செமனே தோட்டத்தில், பிதாவை

நோக்கி, மிகவும் பாரப்பட்டு ஜெபித்த, அவ்வேளையை எடுத்தியம்பும்போதுதான், இம்மூன்று நற்செய்தியாளர்களும், இவ்வார்த்தையை தவறாமல், பயன்படுத்தியுள்ளனர். அதுவும் குறிப்பாக, தன்மீது, திணிக்கப்படப் போகிற பாத்திரத்தை நினைத்து, கலங்கித் துடித்த போதுதான், இவ்வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது.

மத்தேயு ஆசிரியர், *"இயேசு..... துக்கமடையவும், வியாகுலப்படவும் தொடங்கினார்"* என்றும் (26:37), மாற்கு ஆசிரியர் *"இயேசு... திகிலடையவும், மிகவும் வியாகுலப்படவும் தொடங்கினார்"* என்றும்(14:33), கூறுகிறார். ஆனால், வைத்தியனாகிய லூக்காவோ, இன்னும் ஒருபடி மேலே சென்று, அவர் *"வியாகுலப்பட்டு அதிக ஊக்கத்தோடே ஜெபம் பண்ணினார். அவருடைய வேர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய் தரையில் விழுந்தது"* என்று எழுதியுள்ளார்.(22:44).

இந்த மூன்று நற்செய்தியாளர்களில், லூக்கா ஒரு வைத்தியன் (கொலோ.4:14) அத்தோடு எல்லாவற்றையும் திட்டமாய் விசாரித்து, ஒழுங்காய் எழுதும் பழக்கம் கொண்டவன்: (லூக்கா.1:3,4) இவன் சொல்கிறான். இயேசுவானவர் வியாகுலப் பட்டபோது, *"அவருடைய வியர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய்த் தரையிலே விழுந்தது"* என்று. இந்த லூக்கா, இயேசுவானவரின் ஞானஸ்நானம் பற்றி எழுதும் போது கூட, மற்ற மூவரைக் காட்டிலும் வேறுபட்டே நிற்கிறார். யோவான் உட்பட மற்ற மூவரும், *"ஆவியானவர் புறாவைப்போல் இறங்கினார்"* (மத்.3:16; மாற்கு.1:10; யோவான்.1:32) என்று சொல்லும்போது, லூக்கா பரிசுத்த ஆவியானவர் **ரூபங்கொண்டு** புறாவைப்போல் இறங்கினார் என்று கூறுகிறார். எல்லோருமே பரிசுத்த ஆவியானவராலே ஏவப்பட்டு எழுதியிருந்தாலும், லூக்காவின் எழுத்துக்கள் அதிகம் விவரமுள்ளதாயும், பொருள் பொதிந்த தாயுமிருக்கிறது.

அப்படியானால், லூக்கா சொல்வது போல, கெத்செமனேயில் இயேசுவானவர் பாரப்பட்டு, ஜெபித்தபோது, அவருடைய வியர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய்த் தரையில் விழுந்ததா? வியக்கத்தக்க முன்னேற்றம் கண்டிருக்கும் நவீன மருத்துவ உலகம் இது குறித்து மாறுபட்ட கருத்துக் கொண்டிருந்தாலும், இப்படி நடப்பதற்கு முற்றிலும் வாய்ப்பில்லாமில்லையென்று அது ஒத்துக்கொள்கிறது. இங்கிலாந்து தேசத்தைச் சேர்ந்த வில்லியம் ஸ்ட்ராடு **(Dr. William Stroud)** என்ற புகழ்பெற்ற மருத்துவர் இது குறித்து ஆராய்ச்சி செய்து கி.பி. 1874-ல் தான் வெளியிட்ட நூலில், இது சாத்தியம் என்று எழுதியுள்ளார். அதில் துக்கமும், திகிலும் மிக அதிகமான அளவில் ஒன்றுசேர்ந்து, ஒருவனை உணர்வுப்பூர்வமாகத் தாக்கும் போது, அவனுடைய இரத்த நாளங்கள் விரிவடையுமென்றும், அப்பொழுது தோல் மென்மையும் இளக்கமுமடைந்து, சிலநேரங்களில் அப்படி விரிவடையும் இரத்த நாளங்கள் வெடித்து, இளக்கமடைந்த தோலிலுள்ள துவாரங்கள் வழியாக, இரத்தம் கசிந்து வெளியேற வாய்ப்புண்டு என்றும் குறிப்பிட்டுள்ளார். இவரின் இக்கருத்தை 112 ஆண்டுகள் கழித்து, அமெரிக்க தேசத்தைச் சேர்ந்த, நோய்களையும் நோய்களின்

தன்மையையும் அறிவதில் நிபுணரான வில்லியம் எட்வர்ட் (Dr. William Edward) என்பவர் மீண்டும் ஆராய்ந்து, டாக்டர் ஸ்ட்ராடு சொன்னது சரிதான் என்று 1986-ல் ஊர்ஜிதம் செய்திருக்கிறார். இது அமெரிக்க மருத்துவ மாதாந்திர இதழிலும் இடம் பெற்றுள்ளது.

சரி, மருத்துவ உலகம் சொல்வது சரியா? தவறா? (அல்லது) உண்மையாகவே, வியர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய் அவருடைய சரீரத்திலிருந்து வெளிவந்ததா? என்பது பற்றியெல்லாம் மேலும் விரிவாகப் பேச இங்கே இடமில்லை. இத்தலைப்பிலிருந்து, நாம் தெரிந்து கொள்ள விரும்பும் பாடத்திற்கு அது அவசியமுமில்லை. ஆனால், ஒன்று மட்டும் நமக்கு நிச்சயமாகத் தெரிகிறது. அது, கெத்செமனேயில், அவர் மிக அதிக அளவு திகிலடைந்து வியாகுலப்பட்டிருக்கிறாரென்று. *அப்படியானால், நமதாண்டவர், ஏன், அந்தளவு, வேதனைப்பட்டார்? எதற்காக அவ்வளவு வியாகுலப்பட்டார்?*

இதற்குப் பெரும்பாலானவர்கள் கொடுக்கும் விளக்கம், அவர் தன்னை எதிர்நோக்கியிருந்த மரணத்தைக் கண்டு பயந்தார் என்பது. குறிப்பாக, தான் எதிர்கொள்ளவிருந்த சரீரப் பாடுகளைக் கண்டு பயந்து, கலங்கினார் என்பது. சரீரப்பாடுகள் எந்தவொரு மனிதனையும் பயமடையச் செய்யும் என்பது மெய்தான். ஆனால், தெய்வீகம் நிறைந்த மனிதராய் இருந்த, இயேசு, சரீர மரணத்தைக் கண்டு அஞ்சினார் என்று சொல்வது அறிவுடைமை ஆகுமா? தன்னுடைய இளம் பிராயத்திலிருந்து, அவர் தனக்கு எதிராக வந்த எந்தவொரு சூழ்நிலையையும் கண்டு அஞ்சினதில்லை. மாறாக தைரியமாகவும், சாதுரியமாகவும் எல்லாச் சூழ்நிலைகளையும் எதிர்கொண்டார். இக்கருத்துக்கு வலுசேர்க்கும் சம்பவங்களை இங்கே கவனியுங்கள். தனது 12-ம் வயதில் எருச்லேம் பட்டணத்தில், பெற்றோர்களைப் பற்றிக் கவலைப்படாமல், போதகர் நடுவில் உட்கார்ந்து, அவர்களைக் கேள்வி கேட்டார்.(லூக்கா.2:46). அடுத்து, வனாந்திரத்தில் சாத்தானாலே சோதிக்கப்பட்டபோது (மத்.4ம்அதி) அவர் கலக்கமடைந்ததாக வேதாகமத்தில் காணோம். மேலும், தனது ஊழிய நாட்களில், எருசலேம் தேவாலயத்தை பேராசை பிடித்தவர்கள் வியாபார வீடாக்கினபோது, அங்கே கூடியிருந்த பெருங்கூட்டத்தைப் பற்றிக் கிஞ்சித்தும் கவலைப்படாமல், கயிற்றினால் சவுக்குண்டாக்கி, அவர்களை தேவாலயத்திற்குப் புறம்பே துரத்தினார் (யோவான்.2:15)

இப்படிப்பட்ட இயேசு பயந்து நடுங்கினார் என்பது, சரியாகுமா? சொல்லுங்கள், வேறொன்றையும் இங்கே கவனியுங்கள். "*உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக..... நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணினபின்பு நான் இருக்கிற இடத்திலே, நீங்களும் இருக்கும்படி நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன்*" (யோவா.14:1-4) என்று இயேசு சொன்னதையும், "*என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்*" என்று அவர் கூறியதையும் (யோ.11:25) நம்பின சீடர்களும் ஆதிக்கிறிஸ்தவர்களும், மரணத்தை ஒரு பொருட்டாக எண்ணாமல்

தங்களை அதற்கு ஒப்புக்கொடுத்தனர். ஆம், தங்களுக்கிருந்த நம்பிக்கையினிமித்தம் அநேகர் உயிரோடு எரிக்கப்பட்டார்கள், கொதிக்கின்ற எண்ணெய்க் கொப்பரையிலே வீசப்பட்டார்கள். அக்கினி ஜுவாலைகளில் தள்ளப்பட்டார்கள், வாளால் அறுப்புண்டார்கள். ஏன் சிலர் சிலுவை மரணத்திற்கும் ஒப்புக்கொடுக்கப்பட்டார்கள். வேதாகமம் அல்லாத பிற சரித்திரம், இவைகள் பற்றி விபரமாகப் பேசுகிறது. மரணத்தை தழுவுகின்ற நேரத்தில் கூட, கொஞ்சமும் பயப்படாமல் தேவனைத் துதித்திருக்கிறார்கள். எப்படியாவது, தங்களைக் காப்பாற்றும்படி அவர்கள் தேவனிடத்தில் கெஞ்சவுமில்லை. அழுது மடியவுமில்லை.

அப்படியானால், சீடர்களும், ஆதிக்கிறிஸ்தவர்களும் இயேசுவைக் காட்டிலும் தைரியசாலிகளா? அல்லது இயேசுவானவர் அவர்களைப் போலல்லாமல் பயந்தாங்கொள்ளியா? சொல்லுங்கள். இத்தனைக்கும் சீடர்களுக்கும் ஆதிகிறிஸ்தவர்களுக்கும் மரணத்திற்குப் பிறகு என்ன நடக்கும் என்பது பற்றிய நம்பிக்கை மாத்திரமே இருந்தது. ஆனால், இயேசுவானவருக்கோ தான் நித்தியமுள்ளவராகையால் மரணத்திற்குப் பின் என்ன என்பது பற்றிய நேரடி அறிவும் இருந்தது. சீடர்களுக்கு மரணத்திற்குப் பின்னானவைகள் நிழலாகத்தான் தெரிந்தது. ஆனால், இயேசுவுக்கு நிஜமாகவே எல்லாம் தெரிந்திருந்தது. ஆம், தான் மரிப்பது, மூன்றாம் நாள் உயிர்ப்பது, 40 நாள் காட்சி தருவது, பரமேறிச் செல்வது, பிதாவினுடைய வலது பாரிசத்தில் வீற்றிருப்பது என்று இப்படி எல்லாமே தெரியும். ஆகையால், அநேகர் நினைப்பதைப்போல இவர் மரணத்தைக்கண்டும், அடையப்போகும் சரீரப்பாடுகளைக் குறித்தும் திகிலடைந்திருக்கவேண்டிய அவசியமில்லை.

அப்படியானால், அவர் வியாகுலப்பட்டதற்கும்,அவருடைய வியர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய் வெளியேறியது என்று எழுதப்பட்டிருப்பதற்கும், என்ன தான் காரணம்? இது நமக்குள்ளாக எழுகின்ற ஒரு நியாயமான கேள்வி.

கவனியுங்கள், இயேசுவானவர் எதிர்கொண்டிருந்த சிலுவை, அவரை இரண்டு வகையில் பாதிக்கக் கூடியதாக இருந்தது. முதலாவது அவர் சரீரத்தில் மரிப்பது.இரண்டாவது, ஆவிக்குரிய ரீதியில் உலகத்தின் மக்களுக்காகத் தான் பாவமாக்கப்படுவது.

இதில், முதலாவது காரணத்தை நாம் அப்படியே ஒதுக்கி விடலாம். ஏனெனில், மரணத்திற்குப் பிறகு என்ன நடக்குமென்று மிகத் திட்டமாகத் தெரியாத, சீடர்களே, தாங்கள் இயேசுவின் பேரில் கொண்டிருந்த நம்பிக்கையினிமித்தம், கொடுமையான மரணத்தைக் கண்டு அஞ்சாமல் அவைகளை ஆரத்தழுவியிருக்கும் போது அதேமரணத்தை இயேசுவானவர் கண்டு நடுங்கியிருப்பார் என்பதற்கு எந்த முகாந்திரமுமில்லை.

அப்படியானால், நமக்கிருக்கும் அடுத்த ஒரே வாயப்பு, அவர், தான் எல்லோருக்காகவும் பாவமாக்கப்படுகின்ற அந்தக் காட்சியை நினைத்துத்தான்

கலங்கியிருக்கவேண்டுமென்பது.ஆம், அந்தக் காட்சியைக் கண்டுதான் அவர், கண்ணீர்விட்டு கதறி, அழுது புலம்பி, பிதாவை நோக்கி, இந்தப் பாத்திரம் என்னை விட்டு நீங்கக் கூடுமானால் நீங்கட்டும் என்று கெஞ்சியிருக்க வேண்டும். ஏனெனில், அந்தப் பாவ பாத்திரம் ஒரு படு பயங்கர காட்சியாக அவருக்கு முன் நின்று நர்த்தனம் புரிந்திருக்கவேண்டும்.

அருமையானவர்களே, ஒருவேளை இப்பூமியில் வாழ்கின்ற மானிடர்களாகிய நமக்குப் பாவம் ஒரு பெரும் பிரச்சினையாக இல்லாமல் இருக்கலாம். ஏனெனில் அன்றாடம் நாம் பாவம் செய்கிறவர்களாகவும் பாவம் செய்கின்ற சந்ததியின் மத்தியில் வாழ்கிறவர்களாகவும் உள்ளோம். நம்மையுமறியாமல் நாம் பாவத்தோடு பாவமாக மாறிவிட்டோம். எந்தவொரு பாவத்தையும் கூசாமல் செய்வதும், எப்படிப்பட்ட பாவத்தையும் அப்படியே அங்கீகரிப்பதும் நமக்கு பச்சைத்தண்ணீர் குடிக்கிற மாதிரி ஆகிவிட்டது. அப்படிதானே, ஆகையால், நம்முடைய பாவமும் நம்மைச் சுற்றியிருக்கிற பாவமும் நம்மை எவ்விதத்திலும் பாதிப்பதில்லை.

ஆனால், நமதாண்டவர் நிலையோ நம்முடைய நிலைக்கு நேர்மாறானது. பாவத்தைப் பற்றிய நம்முடைய கண்ணோட்டமும், அவரின் கண்ணோட்டமும் முற்றிலும் மாறுபட்டது. நித்திய காலமெல்லாம் தன்னைப்பாவமில்லாமல் காத்துக்கொண்ட பரிசுத்தர் அவர். இந்தப் பூமியின் வாழ்க்கையிலும் 33 ஆண்டுகளாக பாவம் தன்னைத் தீண்ட ஒருபோதும் அவர் அனுமதிக்கவே இல்லை. பேதுரு அப்போஸ்தலன் இது குறித்துக் கூறுவதைக் கேளுங்கள். *அவர் பாவஞ் செய்யவில்லை அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லை* (1.பேதுரு.2:22) ஆக, விண்ணிலும், மண்ணிலும் தன்னைப் பாவமில்லாமல் காத்துக்கொண்ட இயேசுவானவர், உலகத்தின் பாவம் முழுவதும்தன்மேல் விழப்போகிறதென்பதை நினைக்கும்போது அவரால் அதை ஜீரணிக்கவே முடியவில்லை. ஆகவேதான், பிதாவை நோக்கி, இந்தப் பாத்திரம் என்னை விட்டு நீங்கக் கூடுமானால், நீங்கட்டும் என்று மன்றாடினார். அங்கே அவர் நீங்கட்டும் என்று கேட்டுக்கொண்ட பாத்திரம், மரணம் என்ற பாத்திரமோ அல்லது சரீரப்பாடுகள் என்ற பாத்திரமோ அல்ல. மாறாக பாவம் என்ற அந்தப் படுபயங்கரமான பாத்திரம் தன்னை விட்டு நீங்கினால் பரவாயில்லையே தான் பாவமாக்கப்படாமல் தப்பித்தால் பரவாயில்லையே என்று கெஞ்சினார். இதுதான் சரியான காரணமாக இருக்க முடியும்.

தான் பாவமாக்கப்படுகின்ற பயங்கரத்தை நினைக்கும்போது தான், மருத்துவஉலகம் ஆச்சரியப்படக் கூடிய அளவுக்கு வியாகுலப்பட்டுள்ளார். அந்த வேதனையின் உச்சகட்டமாகத்தான் அவருடைய வேர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய்த் தரையில் விழுந்துள்ளது. (லூக்.22:44) பாவம் நமதாண்டவரை எப்படிப் பாடாய்ப் படுத்தியிருக்கிறதென்று பாருங்கள்.

கர்த்தருக்குள் அருமையானவர்களே, பாவத்தைப் பற்றி நமதாண்டவரின் மனோபாவம் இப்படியிருக்கிறதெனில் இந்தப் பாவத்தைக் குறித்த நமது

அணுகுமுறை எப்படியுள்ளது? "*கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது*" என்று (பிலி.2:5) அப்போஸ்தலன் பவுல் பிலிப்பியருக்கு எழுதும்போது கூறுகிறாரே அந்த சிந்தை நமக்குள்ளாக இருக்கிறதா? குறிப்பாக, அந்த கெத்செமனேயில்,இயேசுவானவர் பாவத்தைக் கண்டு கலங்கி அதிலிருந்து தான், காப்பாற்றப்பட்டால் பரவாயில்லையே என்று தேவனை நோக்கி மிகுந்த வியாகுலத்தோடு கெஞ்சினதைப்போல நாம் கெஞ்சுகிறோமா? நம்முடைய நிலை எப்படியிருக்கிறதென்று சீர்தூக்கிப் பார்ப்போம்.

இப்படி, இயேசுவானவரே கண்டு கலங்கிய பாவம், நம்மில் இருக்கக் கூடாது என்று சொல்லும்போது, அநேகர் என்னிடத்தில் அதிகமான பாவங்கள் இல்லையென்றும் அல்லது பெரிய பாவங்கள் இல்லையென்றும் சில நேரங்களில் நான் பாவமே செய்வதில்லையென்றும் கூறுகிறார்கள். அப்படிச் சொல்கிறவர் களிடத்திலே நாம் பேசும்போது அவர்கள் பாவத்திற்குக் கொடுக்கும் விளக்கம் வித்தியாசமானதாக உள்ளது. ஏதோ, கொலையும், கொள்ளையும், திருட்டும், உருட்டும், பொய்யும், புரட்டும், மதுவும், மாதுவும், புகையும், களியாட்டும்தான் பாவமென்றும், மற்றகாரியங்களைப் பற்றி பெரிதாக அலட்டிக்கொள்ள தேவையில்லை என்றும் நினைக்கின்றனர்.

ஆனால், பரிசுத்த வேதாகமம், பாவத்திற்குக் கொடுக்கும் பொருள் முற்றிலும் வேறுபட்டதாக உள்ளது. "*நியாயப்பிரமாணத்தை மீறுகிறதே பாவம்*" என்றும், (1.யோவா.3:4)"*அநீதியெல்லாம் பாவம்*" என்றும் (1.யோவா.5:17) "*ஆதலால், ஒருவன் நன்மை செய்ய அறிந்தவனாயிருந்தும், அதைச் செய்யாமற்போனால், அது அவனுக்கு பாவம்*" என்றும் (யாக்.4:17), "*விசுவாசத்தினால் வராத யாவும் பாவம்*" என்றும் (ரோமர்.14:23), "*தீய நோக்கம் பாவம்*" என்றும் (நீதி.24:9)கூறுகிறது.

அப்படியானால், நாம் இயேசுவைப் போல் பாவத்திற்கு, அஞ்சி நடுங்க வேண்டுமெனில், நம்முடைய பாவங்கள் மேற்சொன்ன வகைகளில் எந்த வகையைச் சார்ந்தாக இருந்தாலும், அதை விட்டு முற்றிலும் விலகவேண்டும். பெரிய பாவங்கள் என்று சிலவற்றைப் பட்டியலிட்டு அவைகளை நான் செய்வதில்லையென்று அற்பதிருப்திப் பட்டுக்கொள்ளக்கூடாது. பாவத்தில் பெரிய பாவம், சிறிய பாவம் என்று எதுவுமில்லை. பாவமென்றால், பாவம் தான. அவ்வளவே.

மேற்சொல்லப்பட்ட பலவகையான பாவங்களுள், நம்முடைய நாட்களில் உள்ள கிறிஸ்தவத்தை மிக அதிகமாக பாதித்து, அதை நாற்றமெடுக்க வைத்திருக்கிற பாவம் *நியாயப்பிரமாணத்தை மீறுகிற பாவமாகும்*. ஆம், தேவனுடைய வார்த்தையை மீறுகிற பாவம். இன்றைய கிறிஸ்தவம் கொஞ்சமும் வெட்கமில்லாமல் இப்பாவத்தை பெருமையோடு செய்து கொண்டிருக்கிறது. இயேசுவானவர் கற்பித்த மெய்க்கிறிஸ்தவம், பொலிவிழந்து காணப்படுவதற்கு இப்பாவமே பிரதான காரணம். ஆம், தன்னை விசுவாசிக்கிறவர்கள் எல்லாரும்

ஒன்றாயிருக்க வேண்டுமென்று அவர் ஜெபித்ததற்கு (யோவா.17:20,21)மாறாக இன்றைய கிறிஸ்தவத்தில், எண்ணிலடங்கா பிரிவினைகள் இருப்பதற்கு, இப்பாவம்தான் காரணம். கிறிஸ்துவின் உபதேசத்திற்கு எதிராக, பல நூதன உபதேசங்கள் நாள்தோறும் முளைத்தெழும்புவதற்கு இப்பாவம் தான் காரணம். சபைகளில் தேவனுடைய திட்டத்தின்படியான ஆளுகையமைப்பு புறக்கணிக்கப் படுவதற்கு இப்பாவம் தான் காரணம்,வசன ரீதியிலான மார்க்க ஒற்றுமை சாத்தியப்படாமலிருப்பதற்கு இப்பாவம் தான் காரணம் என்று இப்படி பட்டியலை நீட்டித்துக்கொண்டே போகமுடியும். கிறிஸ்துவைபோல,பாவத்திற்காக நாம் ஒவ்வொருவரும் வியாகுலப்படுவது,உண்மையானால் வசனத்தை மீறுகிற,இப்பாவத்திலிருந்து நாம் நம்மை உடனடியாக விலக்கிக் கொள்ள முயற்சிக்கவேண்டும்.

நம்முடைய இம்முயற்சியில் நாம் வெற்றி பெறுவோமானால், உண்மையாகவே அவருடைய வியாகுலத்தில் நாம் பங்குபெறுகிறவர்களாக இருப்போம். *அவரோடேகூடப் பாடுகளைச் சகித்தோமானால் அவரோடேகூட ஆளுகையும் செய்வோம்*; (2.தீமோ.2:12) என்ற வசனத்தின்படியாக,அதற்கான பலன் நமக்குப் பரலோகில் நிச்சயம் கிட்டும். பாவத்திற்காக மிகுந்த வியாகுலப்பட்ட இயேசுவை உயர்த்தின பரலோகத்தின் தேவன், நம்மையும் உயர்த்துவார். நாமும் அவருடனே கூட என்றென்றும், அந்த நித்திய இராஜ்ஜியத்தில் என்றென்றும் வாழ்வோம். ஆமென்!

**எ.ச.செ. ராஜநாயகம்**

# தேவனுடைய நியாயத்தீர்ப்பு

**ரோமர். 2ம் அதிகாரத்திலிருந்து ....**

1. சத்தியத்தின்படி நியாயத்தீர்ப்பு இருக்கும்.
2. பாவம் செய்த அனைவருக்கும் எதிராக நியாயத்தீர்ப்பு இருக்கும்.
3. எல்லோரும் நியாயத்தீர்ப்புக்கு முன் நிற்கவேண்டும் (யூதர்கள் உட்பட)
4. தேவனின் நற்குணத்தினால் நியாயத்தீர்ப்பு தாமதமாகிறது.
5. தேவனின் கோபாக்கினை நாள் நியாயத்தீர்ப்பு எனப்படும்
6. அவனவனின் கிரியைக்குத்தக்க பலனை தேவன் அவனவனுக்குத் தருவார்
7. ஒரு மனிதன் எந்த தெய்வீக சட்டத்தின் கீழ் வாழ்ந்தானோ அந்த சட்டத்தின் மூலம் நியாயந்தீர்க்கப்படுவான்.
8. தேவன் இயேசுகிறிஸ்துவைக் கொண்டு (மூலமாய்) நியாயந்தீர்ப்பார்.

# விசுவாசத்தினால் இரட்சிப்பு

விசுவாசத்தினால் இரட்சிப்பு உண்டாகிறது என்பதை வேதாகமம் தெளிவாக்குகிறது. அதாவது, ஒருவர் விசுவாசத்தினால் இரட்சிக்கப்படுகிறார். இன்னொரு வகையில் சொல்வதானால், விசுவாசத்தினாலே நாம் நீதிமான்களாக்கப்படுகிறோம். பவுல் கூறுவதாவது, ***"ஆதலால், மனுஷன் நியாயப் பிரமாணத்தின் கிரியைகளில்லாமல் விசுவாசத்தினாலேயே நீதிமானாக்க படுகிறான்"*** என்று தீர்க்கிறோம். (ரோமர்.3:28) இங்கு குறிப்பிடப்படுகின்ற நியாயப்பிரமாணம் மோசேயின் பிரமாணத்தைக் குறிப்பிடுவதாக மேற்க்கண்ட வசனப்பகுதியிலிருந்து அறிகிறோம். தொடர்ந்து பவுல் கூறுகையில், ***"இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப் பட்டிருக்கிற படியால், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம்."*** (ரோமர்.5:1) என்று கூறுகிறார். இதற்கொப்பான பல வசனங்களை நாம் தொடர்ந்து குறிப்பிடலாம். எனவே விசுவாசத்தினாலே இரட்சிப்பு என்பதை நாம் மறுக்க இயலாது.

விசுவாசத்தினாலே இரட்சிப்பு என்பதை நாம் மறுக்கமுடியாத அதே வேளையில், விசுவாசத்தினால் மட்டுமே இரட்சிப்பு என்று நாம் போதிக்க இயலாது. பெரும்பாலான மதவுலக மக்கள் இரட்சிப்புக்கு விசுவாசம் வேண்டும் என்ற வசனப்பகுதியில் விசுவாசத்தினால் மட்டுமே இரட்சிப்பு என்று வாதிடுகின்றனர். இது உண்மையன்று. இரட்சிப்பு விசுவாசத்தினால் மட்டும் இல்லை. யாக்கோபு இதைக்குறித்து பேசுகையில், ***ஆதலால் மனுஷன் விசுவாசத் தினாலே மாத்திரமல்ல, கிரியைகளினாலேயும் நீதிமானாக்கப்படுகிறா னென்று நீங்கள் காண்கிறீர்களே*** என்கிறார்.(யாக்.2:24).

விசுவாசத்தினாலே மாத்திரம் மனுஷன் இரட்சிக்கப்படுவதில்லை என்று கூறும்போது விசுவாசத்தினால் இரட்சிக்கப்படுகிறோம் என்று வசனம் கூறுவதன் பொருள் என்ன? விசுவாசம் என்பது மனதளவில் இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று ஏற்றுக்கொள்வதற்கும் அதிகமான காரியங்களைத் தன்னகத்தே கொண்டது. தேவனுடைய வசனத்தின் மீது செயல்படுவதையும், கர்த்தருடைய சித்தத்தின்படி செயல்படுவதையும், அவருடைய கற்பனைகளை கைக்கொள்வதையும், கீழ்ப்படிதலோடு அவருக்கு ஊழியம் செய்வதையும் விசுவாசம் தன்னகத்தே கொண்டது. இது விசுவாசத்திலிருந்து ஒன்றையும் எடுத்துப்போடுவதில்லை. தேவனுடைய கிருபையை தவிர்ப்பதுமில்லை. மாறாக, தேவன் தமது இரட்சிப்பை நமக்கு நீட்டும்போது நாம் அதை விசுவாசத்தோடும், கீழ்ப்படிதலோடும் ஏற்றுக்கொள்ள முற்படவேண்டும். கர்த்தர், நம்மை செய்யும்படி எதிர்பார்க்கிற எல்லாவற்றையும் செய்தபின், நம்முடைய இரட்சிப்பு நமது விசுவாசத்தையும், தேவனுடைய கிருபையையும், அடிப்படையாகக் கொண்டது. அது எப்படி கிரியை செய்கிறது எனக் காண்போம். உதாரணமாக, யோவான் 3:16-ஐ எடுத்துக்கொண்டால், அதில் கிறிஸ்து கூறும்போது, *தேவன்*

*தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவனெவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்* என்றார் இதைக் கூறியவுடனே, *ஆனால் அவருடைய நாமத்தின் மேல் விசுவாசம் கொண்டுள்ள எவனும் அழிவைக் காணாமல், நித்திய ஜீவனை உடையவனாகிறான்* என்று யாராவது சொல்லக்கூடும் அது சரியே. ஆகிலும் அவர் ***விசுவாசம் மட்டும் கொண்டுள்ள எவனும்*** என்று குறிப்பிடவில்லையே. மாறாக, நாம் *எதை வாசிப்பது* என்று கேட்கலாம். *இயேசுவிலே விசுவாசம் வைக்கிற எவனும்* என்பது தெரிந்ததே. இப்போது நமது கேள்வி,நீங்கள் இயேசுவை விசுவாசிக் கிறீர்களா? என்பதே. நீங்கள் விசுவாசம் வைத்திருப்பதாகக் கூறுவீர்கள். அப்படியானால் அவர் சொல்வதையெல்லாம் நீங்கள் செய்யும் அளவுக்கு உங்களுக்கு விசுவாசமிருக்கிறதா? இருப்பின் அவருக்கு நீங்கள் கீழ்ப்படிவீர்கள். அவருடைய போதனைகளுக்கு கீழ்ப்படியும் அளவுக்கு நீங்கள் விசுவாசியாவிட்டால், பிறகு உங்கள் விசுவாசம் செத்ததாகிறது.

இப்பொழுது யோவான் 3:36ஐ கவனிக்கவும்: *குமாரனிடத்தில் விசுவாசமாயி ருக்கிறவன் நித்திய ஜீவனை உடையவனாயிருக்கிறான். குமாரனை விசுவாசியாதவனோ ஜீவனைக் காண்பதில்லை. தேவனுடைய கோபம் அவன் மேல் நிலைநிற்கும்* என்றார். இங்கு முதலாவதாக கவனிக்க வேண்டியது. ***விசுவாசம்*** மட்டும் என்று கூறப்படவில்லை. அடுத்து, வசனத்தின் இறுதியில் விசுவாசியாதவர்களுக்கு என்ன சம்பவிக்கும் என்று கூறுகிறார் என்பதைக் கவனியுங்கள்: திருத்தப்பட்ட வேதாகம மொழியாக்கத்தில் குமாரனுக்குக் கீழ்ப்படியாதவன் ஜீவனைக் காண்பதில்லை என்று கூறப்படுகிறது. இதையே வேறுவிதமாக சொல்வதெனில் குமாரனை விசுவாசிக்கிறவன் அல்லது கீழ்ப்படிபவன் நித்திய ஜீவனை உடையவன். ஆனால், விசுவாசியாதவன் அல்லது கீழ்ப்படியாதவன் ஜீவனைக் காணமாட்டான்.

ரோமர்களுக்கு பவுல் கூறுகையில், தேவன் கிறிஸ்துவை***மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசவாசித்தால் இரட்சிக்கப்படுவாய் என்று கூறுகிறார்.***(ரோமர்.10:9) அடுத்த வசனத்திலேயே, விசுவாசமும் அறிக்கை யிடுதலும் இரட்சிப்பு உண்டாகும்படி செயல்படுத்தப்படுவதேயன்றி, ஏற்கனவே இரட்சிப்பைப் பெற்றுக் கொண்டோம் என்பதற்காக அல்ல என்று கூறப்படுகிறது. ஒருவர் அறிக்கையிடவும், விசுவாசக்கவும் செய்தால் கர்த்தர் இட்ட கட்டளையை செய்யாமலிப்பாரோ? அப்போஸ்தலர் 8:26-39 ல் கூறப்பட்டுள்ள ஒரு உதார்ணத்தை காண்போம். இங்கு பிலிப்பு எத்தியோப்பிய மந்திரிக்கு போதிக்கையில், தண்ணீருள்ள ஓர் இடத்திற்கு இருவரும் வந்து சேருகின்றனர். ***மந்திரி அவனை நோக்கி, 'இதோ தண்ணீர் இருக்கிறதே நான் ஞானஸ்நானம்' பெற தடையென்ன? என்றான் அதற்கு பிலிப்பு; நீர் முழு இருதயத்தோடும் விச்வாசித்தால் தடையில்லை என்றான். அப்பொழுது அவன் இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறேன் என்று சொல்லி, இரதத்தை நிறுத்தச் சொன்னான். அப்பொழுது பிலிப்பும் மந்திரியுமாகிய இருவரும் தண்ணீரில் இறங்கினார்கள். பிலிப்புஅவனுக்கு ஞானஸ்நானம்***

***கொடுத்தான்.*** மந்திரி செய்ததென்ன? கிறிஸ்துவை அறிக்கையிட்டான், தனது முழு இருதயத்தோடும் விசுவாசித்தான், அதைக்காட்டும்படி கர்த்தருக்குக் கீழ்ப்படிந் தான். ஆதலால் அவன் இரட்சிக்கப்பட்டான். அப்போஸ்தலர் 16:31-ல் பிலிப்பிய சிறைக்காவலனுக்கு கூறப்பட்டது என்னவெனில்;***கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி அப்பொழுதும் நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்*** அநேகர் இத்துடன் நிறுத்திக்கொள்கின்றனர். அது தவறு சிறைக்காவலன் யார்? அவன் ஒரு அவிசுவாசி. எனவே முதலாவதாக அவன் விசுவாசிக்க வேண்டியது அவசிய மாயிற்று.அதைச் சாத்தியமாக்க பவுலும் சீலாவும் தேவனுடைய வசனத்தை அவனுக்கும் அவனுடைய வீட்டாரனை வருக்கும் போதித்தனர். அவனுக்கு விசுவாசம் வந்தபிறகு,(ரோமர்.10:17) அவர்களுடைய காயங்களை அவன் கழுவினான். அதன் மூலம் தனது மனந்திரும்புதலை வெளிப்படுத்தினான். பிறகு ஞானஸ்நானம் அவனுக்கும், அவனுடைய வீட்டாரனைவருக்கும் உடனடியாக கொடுக்கப்பட்டது.

குறிப்பு, கட்டளையாக அநேக வசனங்கள் பேசுவதைக் கவனியுங்கள். உதாரணமாக கிறிஸ்து பேசும்போது ***விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்*** (மாற்கு.16:16) விசுவாசித்த ஒரு கூட்ட ஜனங்களிடத்தில் பேதுரு குறிப்பிடுகையில், ***நீங்கள் மனந்திரும்பி , பாவமன்னிப்பிற்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள். அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள் என்றான்.***(அப்.2:38) கர்த்தர் ஜனங்களிடத்தில் ஒரு முறை விசுவாசம் மட்டும் அவர்கள் இரட்சிக்கப்பட போதுமானது என்றும், இன்னொரு முறை அவர்கள் இரட்சிக்கப்பட குறிப்பிட்ட சில கட்டளைகளுக்குக் கீழ்ப்படியவேண்டும் என்றும் கூறுவாரா? நிச்சயமாக இல்லை, உண்மையென்னவெனில் ஒருவர் கர்த்தரிடத்தில் விசுவாசம் வைத்தால் அல்லது உண்மையான விசுவாசத்தை அவர் மீது வைத்தால் கர்த்தருடைய கட்டளைக்குக் கீழ்ப்படிய அவர் உந்தப்படுவார். அதாவது அவர் தனது விசுவாசத்தை நிருபிக்க, வெளிக்காட்ட அல்லது விளங்கப்பண்ணவே முயலுவார். உதாரணமாக வரலாற்றினூடே தேவனுடைய மக்கள் எப்படித் தங்கள் விசுவாசத்தை காண்பித்தார்கள் என்பதற்கு எபிரேயர் 11-ம் அதிகாரத்தை வாசித்துப்பாருங்கள். நிச்சயமாக இதைவிடக் குறைவாக தேவன் எதையும் நம்மிடத்தில் எதிர்ப்பார்க்கவில்லை.

கர்த்தர் இதே கேள்வியை ஒருமுறை கேட்டார் என்பதை நினைவுபடுத்திப் பாருங்கள்; ***என்னை ஆண்டவரே!ஆண்டவரே! என்று நீங்கள் சொல்லியும் நான் சொல்லுகிறபடி நீங்கள் செய்யாமற் போகிறதென்ன?*** (லூக்கா.6:46) நீங்கள் விசுவாசத்தின் உபதேசத்தைக் கைக்கொண்டிருந்தால், கர்த்தர் அதே கேள்வியை உங்களிடத்திலும் கேட்கலாம். சில வசனங்களை மாத்திரம் தனிமைப்படுத்தி, அதைத் தவறாக வாசித்து, வசனத்திற்குப் புறம்பான உபதேசத்தை கெட்டியாக ப் பிடித்துக்கொள்ளாதேயுங்கள்.கர்த்தரை விசுவாசித்து, அவர் சொல்லிற்கு செவி சாய்த்து, கீழ்ப்படிந்தால் மாத்திரமே உங்கள் விசுவாசத்தினாலேயே நீங்கள் இரட்சிக்கப்படுவீர்கள்.

**J.C. CHOATE** J.C. சோட்

### பெண்கள் பகுதி

# ஒரு பெண் ஆணைவிட குறைந்தவளா ?

சில சமயங்களில் பெண் என்பவள் ஆணுக்கு ஒரு வேலைக்காரியைக் காட்டிலும் சற்று மேலானவள் என்பது போல சில மக்கள் நினைக்கிறார்கள். ஒருவேளை அந்த ஆண் அவளுடைய கணவனாகக் கூட இருக்கலாம். பிள்ளைகளைப் பெறுவதும், வீட்டைப் பாதுகாப்பதும், உணவு தயாரிப்பதுமே அவள் செய்யும் நல்ல காரியங்கள் என்று நினைத்து விடுகிறார்கள். இன்னும் சில மதங்கள் ஒரு பெண், பெண்ணாக இருக்கும்போது இரட்சிப்படையமுடியாது என்றும் இரட்சிப்படைய வேண்டுமெனில், அவள் ஆணாக மறுபிறவி எடுக்க வேண்டும் என்றும் போதிக்கிறது.

இந்த எண்ணத்தையெல்லாம் எதிர்க்கும் விதையில், வளர்ந்த நாடுகளில் **பெண்கள் விடுதலை இயக்கம்** என்ற பெயரில் எல்லா வகையிலும் பெண்கள் ஆண்களுக்கு சமமானவர்களே என்று பறைசாற்றுகிறார்கள். சமத்துவத்தை நிலைநாட்டுவது மட்டும் இந்த இயக்கத்தின் நோக்கமல்ல, மேலும் இதன் இறுதியான இலக்கு என்னவெனில், உலகத்தில் உள்ள அனைத்து பெண்களின் அதிகாரமும் சேர்ந்து, ஆண்கள் நிலைநாட்டியுள்ள அதிகாரத்தை முறியடிப்பதே ஆகும். இந்தச் செயலானது ஆண்களுக்கும், பெண்களுக்குமிடையே போட்டி மனப்பான்மையை உருவாக்கினதோடு அதன் விளைவாக பகைமை, கசப்புத்தன்மை இல்லங்கள் உடைந்து போதல் போன்றவற்றை ஏற்படுத்தியுள்ளன.

நம்முடைய அக்கறை என்னவென்றால் பெண்களின் பங்கு பற்றியும், ஆணோடு அவளுக்கு இருக்கும் உறவு பற்றியும் தேவன் என்ன கூறுகிறார் என்பதே புறமதஸ்தருடைய கண்ணோட்டமோ, விடுதலை இயக்கமோ தேவனால் உண்டானதல்ல. ஆனால் நாம் வேதத்தின் பக்கம் சென்று பார்க்கும்போது, பெண்களின் பங்கு என்ன? பெண்கள் இருக்கவேண்டிய இடம் எது? போன்றவவைப் பற்றி தேவன் என்ன சொல்கிறார் என்பதை திட்டமும் தெளிவுமாகத் தெரிந்து கொள்ளமுடியும்.

பெண்கள் ஆண்களைக் காட்டிலும் குறைந்தவர்களா? வேதாகமத்தின் முதல் புத்தகமாகிய - ஆதியாகமத்தில்-நாம் இதற்குப்பதிலைக் காண முடியும். தேவன் மிருக ஜீவன்களை உண்டாக்கினார். கடைசியாக அவர் மனிதனை சிருஷ்டித்தார். பிறகு *தேவனாகிய கர்த்தர்* வெளியின் சகலவித மிருகங்களையும், ஆகாயத்தின் சகலவித பறவைகளையும் மண்ணினாலே உருவாக்கி, ஆதாம் அவைகளுக்கு என்ன பேரிடுவான் என்று பார்க்கும்படி அவைகளை அவனிடத்தில் கொண்டுவந்தார்; அந்தந்த ஜீவஜந்துக்கு ஆதாம் எந்தெந்தப்

பேரிட்டானோ அதுவே அதற்குப் பேராயிற்று. அப்படியே ஆதாம் சகலவிதநாட்டு மிருகங்களுக்கும் ஆகாயத்துப்பறவைகளுக்கும், சகலவிதக் காட்டுமரங்களுக்கும் பேரிட்டான். ஆதாமுக்கோ ஏற்ற துணை இன்னும் காணப்படவில்லை. (ஆதி.2:19,20).

ஏற்ற துணை என்ற வார்த்தையிலிருந்து, தேவன் பெண்களை, *ஓர் உதவிக்காரர்,ஏற்ற துணை, அனுபவங்களைப் பரிமாறிக்கொள்ளும் ஓர் கூட்டாளி, அவனது அருகில் இருந்து வாழ்வில் பொறுப்பாக இருப்பவள்* என உத்தேசிக்கிறார்.

பெண்ணை இந்த உலகிற்கு கொண்டு வருவதற்காக,"... ***தேவனாகிய கர்த்தர் ஆதாமுக்கு அயர்ந்த நித்திரையை வரப்பண்ணினார். அவன் நித்திரையடைந்தான். அவர் அவன் விலா எலும்புகளில் ஒன்றை எடுத்து அந்த இடத்தை சதையினால் அடைத்தார். தேவனாகிய கர்த்தர் தாம் மனுஷனில் எடுத்த விலா எலும்பை மனுஷியாக உருவாக்கி அவனை மனுஷனிடத்தில் கொண்டுவந்தார்"*** .(ஆதி.2:21,22)

தேவன் உருவாக்கிய பெண்ணை ஆதாம் பார்க்கும் பொழுது ***அப்பொழுது ஆதாம், இவள் என் எலும்பில் எலும்பும், என் மாம்சத்தில் மாம்சமுமாய் இருக்கிறாள், இவள் மனுஷனில் எடுக்கப்பட்டபடியினால் மனுஷி என்னப்படுவாள் என்றான்*** (ஆதி.2:23).

ஆதியாகம புத்தகத்தின் இறுதியான கருத்து என்னவென்றால், ***இதினிமித்தம் புருஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு, தன் மனைவியோடே இசைந்திருப்பான்; அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள்*** (ஆதி.2:24) என்பதே.

மேற்கூறப்பட்ட இந்த சிருஷ்டிப்பின் உண்மையிலிருந்து நாம் நிறையக் காரியங்களைக் கற்றுக் கொள்ள முடியும்.

1. ஆதாம் முதலில் உருவாக்கப்பட்டான். ஆகையால் பெண்ணை விட அவன் தான் முதல் இடம் பெறுகிறான்.

2 ஆதாம் பூமியின் மண்ணிலிருந்து உருவாக்கப்படுகிறான். பெண்ணோ ஆதாமுடைய பக்கவாட்டில் உள்ள எலும்பிலிருந்து உண்டாக்கப்படுகிறாள். எனவே அவள் ஆணுடைய ஒரு பகுதியாக இருக்கிறாள்.

3. அந்த எலும்பானது அவனுடைய தலையிலிருந்து எடுக்கப்படவில்லை. அப்படி எடுத்திருந்தால் அவள் அவனை ஆட்சி செய்து விடுவாள். அவனுடைய காலிலிருந்தும் எடுக்கப்படவில்லை. அப்படியிருந்தால் ஆண் அவளை தன் காலால் நசுக்கி கொடுமைப்படுத்தி விடுவான். மாறாக எலும்பானது அவனது பக்கவாட்டில் இருந்து எடுக்கப்பட்டதால் அவள் அவனுடன் சமமாக இருக்கிறாள்.

4. சரியாகச் சொல்லப் போனால்,தேவன் ஆணையும், பெண்ணையும் ஒரு முழு பாகத்தின் இரண்டு பாதிகளாகப்படைத்தார். இந்த இரண்டு பாதிகளும் இருந்திராவிட்டால் மனித இனத்தில் இனப்பெருக்கம் என்பதே இல்லாமல் போயிருந் திருக்கும். ஆகையால் இரண்டு பாதிகளும் சமமான முக்கியத்துவம் பெறுகிறது. இனப்பெருக்க ஓட்டத்தை தொடர்ந்து நடத்த இருவருடைய பங்கும் மிகவும் அவசியமாய் உள்ளது.

5. வயது வந்த ஆணும், பெண்ணும் திருமணத்தில் தங்களை இணைத்துக் கொள்ளும்போது, ஆதிமுதலான தேவனுடைய திட்டப்படி இருவரும் ஒன்றாகிறார்கள். புதிய இணைப்பு ஏற்படுகிறது. ஒரே *மாம்சம்* என்றழைக் கப்படுகிறார்கள். ஒரு முழுப்பொருளின் சரிபாதியாக இருக்கும் இருவரும் சரீரப்பிரகாரமாகவும், உணர்வின் அடிப்படையிலும் வாழ்நாள் முழுவதும் ஒன்றாயிருக்கிறார்கள்.

6.தேவனுடைய வாஞ்சையென்னவென்றால், இருநபர்களும் அதாவது ஆணும், பெண்ணும் தன் குடும்பத்திலுள்ள மற்றவர்களை விட்டு விட்டு, குடும்பம் என்கிற புதிய இணைப்பை உருவாக்க வேண்டும் என்பதே ஆகும்.

ஆகையால், ஆதியிலிருந்தே தேவன் மனிதனை முழுமையடையச் செய்வதற்காகவும் அவனோடு உதவியாய் இருக்கவும், பெண்ணை உருவாக்கினார். அவர்கள் தங்கள் வாழ்நாட்காலத்திலும், அவர்களுடைய குடும்பம் அவர்கள் வேலை, தேவனோடும் மற்றவர்களோடும் அவர்களுக் கிருக்கும் உறவு போன்றவைகளிலும் பெண்ணானவள் அவனோடு சரியாகப் பொருந்தி வரும்படியாகவும் வடிவமைக்கப்பட்டுள்ளாள்.அவ்வாறு இருக்கும் போது அவர்கள் வாழ்க்கை முழுமையடைகிறது. உண்மையாகவே, அவள் அவனுக்கு மிகவும் தேவையான ஒன்றாக இருக்கிறாள். எந்த வகையிலும் தாழ்ந்தோ அல்லது குறைந்த மதிப்புள்ளவளாகவோ அல்லது குறைந்த தன்மையுள்ளவளாகவோ அல்ல.

ஆகவே ஆணைவிட பெண் குறைந்தவள் அல்ல. சமமாக இருக்கும் படியாகவே தேவனால் படைக்கப்பட்டுள்ளாள்.

**பெட்டிசோட்** **ரேச்சல் இராஜநாயகம்.**

# நியாயாதிபதிகள் ஒரு கண்ணோட்டம்

1. **ஆசிரியர்** : சாமுவேல் தீர்க்கதரிசி

2. **காலம்** : ஏறக்குறைய கி.மு.1050

3 **மொத்த நியாயாதிபதிகள்** : 15 பேர் (ஏலி,சாமுவேல் உட்பட)

4. **இந்நூல் பற்றி** :

அ) இந்நூல் நியாயாதிபதிகளின் ஆட்சியின் இறுதிக்காலத்தில் அதாவது சாமுவேல்,ஏலி ஆகியோரின் காலத்தில் அல்லது சவுல் ராஜாவின் ஆட்சியின் துவக்க நாட்களில் எழுதப்பட்டிருக்கலாம் என்று எண்ணப்படுகிறது.

ஆ) இப்புத்தகம் யாரால் எழுதப்பட்டது என்று, தானே நேரிடையாக வெளிப்படுத்தவில்லையென்ற போதிலும், யூதர்கள் இந்நூலை சாமுவேல் எழுதினார் என்று கருதுகிறார்கள்.

இ) யோசுவாவின் மரணத்திலிருந்து - சாமுவேலின் காலம்வரை இந்நூல் சுமார் 360 ஆண்டுகளை தனக்குள்ளடக்கியிருக்கிறது.

(1410 கி.மு. - 1050 கி.மு)

ஈ) இந்நூலில், தங்களது எல்லைகளுக்கு வந்த அச்சுறுத்தல்களைச் சந்திப்பதற்கு தனிப்பட்ட ஒரு கோத்திரம் அல்லது ஒரு கோத்திரம் மற்ற கோத்திரங்களுடன் செய்துக்கொண்ட தற்காலிக உடன்படிக்கைப் பற்றி பிரதானமாகப் பார்க்கிறோம்.

4. இந்நூலின் நோக்கம்:

1. கானான் தேசத்தை சுதந்தரித்த காலத்திலிருந்து, இஸ்ரவேல் தங்களுக்கென்று ஒரு மனித ராஜா தேவை என்று கேட்ட காலம்வரையிலுள்ள வரலாற்றை சொல்லும் நூலாக இது விளங்குகிறது

2. தேவனுக்கு விரோதமாய் செயல்படுவது தண்டனையைக் கொண்டுவரும் எனக்காட்டுகிறது

3. ஆனால் மனந்திரும்பினால், தேவனோடு மீண்டும் நமது உறவு சீராகும் என்பதையும் இந்நூல் நமக்குக் காட்டுகிறது

வாலிபர் பகுதி

# ஞானவான் யார்?

அகிலத்தை அளப்பில்லா அநந்த ஞானத்துடன் சிருஷ்டித்த நாள் முதல் ஞாயிறு எழும் ஒவ்வொருதினமும் பகுத்தறிவுகொண்ட மனிதன் ஞானத்தை பெற்றிடல் வேண்டும் என்ற எண்ணத்துடன் வாழந்து வருகிறான் என்பது உண்மையென்றாலும், ஞானத்தில் மெய்ஞானம், போலிஞானம் என்கிற வகைகள் உண்டு என்பதை அறிந்தவர்கள் பாரினில் நில அளவு என்றால், அறியாதோர் வையகத்தில் கடலளவு என்று சொன்னால் அது மிகையாகாது என்பதை என்னோடு சேர்ந்து நீங்களும் ஒத்துக்கொள்வீர்கள் என நம்புகிறேன்.

அறுபத்தியாறு நதிகள் சங்கமிக்கும் மகாப்பெரிய ஆழமான கடல் போன்ற வேதாகமத்தில் ஞான நதியாம் நீதிமொழிகளில் " *ஞானத்தை வா என்று கூப்பிட்டு புத்தியைச் சத்தமிட்டு அழைத்து, அதை வெள்ளியைப்போல் நாடி, புதையல்களைத் தேடுகிறதுபோல் தேடு...* " (நீதி.2:3,4) என்கிறார் ஞான முடிசூடிய சாலொமோன். வாலிபர்களாகிய நாம் ஞானத்தை தளராமல் தேடி, அதில் நிலைத்திருக்கும்படி விவிலியம் விளம்புவதிலிருந்து யார் ஞானவான்? என்பதை சற்று அலசி ஆராய்வோம்.

## I. ஆலோசனைகளுக்கு செவிமடுப்பவன் ஞானவான்.

எகிப்தின் ஏகாதிபத்தியத்தின் அடிமை சங்கலிகளை ஏகசக்கராதிபதியாகிய தேவனின் துணை கொண்டு தெறிபடச் செய்த மோசே, இஸ்ரவேலர்களை ஏகமாய், எழுச்சியுடன் தலைமை ஏற்று ஏற்றமுடன் வழிநடத்தினான். மோசே வழிநடத்துவதோடல்லாமல் அவர்களின் பிரச்சினையைக் குறித்து நியாயம் விசாரித்து வந்தான். ஜனங்கள் காலமே தொடங்கி சாயங்காலமவரை அவனிடத்தில் நியாயத்திற்காய் நிற்பார்கள். இதைக் கண்ட மோசேயின் மாமனாகிய எத்திரோ மோசேக்கு ஒரு ஆலோசனையைத் தருகிறார்.

எத்திரோ இயம்பின ஆலோசனை யாதெனில், மோசே ஒருவர் மாத்திரம் நியாயம் விசாரித்து விசாரமடைவதை விட திறமையான மனிதர்களை ஆயிரம்பேருக்கும், நூறுபேருக்கும், ஐம்பது பேருக்கும், பத்து பேருக்கும் அதிபதிகளாக ஏற்படுத்தி. பெரிய காரியங்களை மாத்திரம் மோசே விசாரிக்கட்டும் என்றான். மோசே, "*ஆலோசனைக்குச் செவிகொடுக்கிறவனோ ஞானமுள்ளவன்*" (நீதி.12:15) என்ற ஞான வார்த்தைக்கு சாலச்சிறந்த உதாரணமாக தன் மாமனின் ஆலோசனையை ஏற்று நடந்தான்

தாவீது, தேவனுக்கு ஓராலயம் கட்டவேண்டும் என்று நினைத்தான். அதற்கு செயல்வடிவம் தந்த கொற்றவனாகிய சாலொமோனின் மகன் ரெகொபெயாம், ராஜ்யப் பொறுப்பு ஏற்றவுடன், தன் தகப்பன் சாலொமோன் ஜனங்கள் மேல் சுமத்திய நுகத்தை குறைக்க வேண்டும் என்ற மக்களின் கோரிக்கையை பரிசீலித்த

போது, முதியோரின் ஆலோசனையைத் தள்ளி, தன் வயதிற்கு சற்றொப்ப, வாலிபர்களின் ஆலோசனைக்கு செவிமடுத்ததால் இஸ்ரவேல் ராஜ்யம் இரண்டு பிரிவாக பிளவுபட்டுப்போனது."*மூடனுடைய செவிகள் கேட்கப் பேசாதே; அவன் உன் வார்த்தைகளின் ஞானத்தை அசட்டைபண்ணுவான்* " ( நீதி.23:9) என்ற தன் தந்தையின் வார்த்தைக்கொப்பான எடுத்துக்காட்டாக இவன் மாறினான்.

வாலிபர்களாகிய நாம், ஆலோசனையைக் கேட்பதின் மூலம் ஞானவான்களாக திகழ்வோம் என்ற, வேதாகமம் கூறும் உண்மையை அறிந்த போதிலும், யாருடைய ஆலோசனையை ஏற்கவேண்டும் என்பதில் தெளிவுடையவர்களாக இருந்திடல் வேண்டும். ரெகொபெயாமைப்போல், தன் உடன் வளர்ந்த அல்லது தனது அனுபவத்திற்குச் சமமான வாலிபர்களின் ஆலோசனையை கேட்பதைவிட மோசே, அனுபவம் மிக்க தன் மாமனின் ஆலோசனையைக் கேட்டது போல், நாமும் இந்த வாலிப வயதிலிருந்தே முதியோரின் சொல்கேட்டு நடந்திடல் வேண்டும்.

வாலிபர்களே! முதியோரின் சொல்லைத் தள்ளிவிட்டாலும் நாம் அனுபவப் பட்டபின் திருந்த இந்த வாழ்க்கையில் வாய்ப்புகள் உண்டு. ஆனால், லூக்கா தன் சுவிசேஷ நூலில் நமக்கு எச்சரிப்பின் எக்காளத்தை தொனிக்கிறார். "*பரிசேயரும் நியாயசாஸ்திரிகளுமோ அவனாலே ஞானஸ்நானம் பெறாமல் தங்களுக்குக் கேடுண்டாகத் தேவனுடைய ஆலோசனையைத் தள்ளிவிட்டார்கள்.* " (7:30) கவனித்தீர்களா, தேவ ஆலோசனைத் தள்ளிவிட்டால் நமக்கு மிஞ்சுவதெல்லாம் கேடுதான். ஆகவே, கர்த்தருக்கு பயப்படுதலே ஞானஊற்று, என்பதை அறிந்து நித்தியம் சம்பந்தப்பட்ட காரியங்களில் தேவ ஆலோசனையை மாத்திரமே ஏற்று நடப்போம்.

## II.தீமையை விட்டு விலகுகிறவன் ஞானவான்

தேவனின் இருதயத்திற்கு ஏற்ற தாசனாகிய தாவீதின் புதல்வன் சாலொமோன், *ஞானமுள்ளவன் பயந்து தீமைக்கு விலகுகிறான் மதியீனனோ மூர்க்கங்கொண்டு துணிகரமாயிருக்கிறான்.*(நீதி.14:12) என்ற உயரிய உண்மையை ஞானமுத்தாய் உதிர்த்திருக்கிறார். தீமையாய் அல்லது பொல்லாங்காய் நமக்கு காட்சியளிக்கிற எல்லாவற்றையும் விட்டுவிலக வேண்டும். நாம் ஒரு காரியத்தை அணுகும்போது அது பொல்லாங்காயிருக்குமோ என்ற ஐயம் நம் உள்ளத்தில் எழுந்தவுடனே, **செய்து பார்த்து பின் முடிவு எடுப்போம்**என்று துணிகரமாயிராமல், ஞானமாய் அந்த காரியத்திலிருந்து வாலிபர்களாகிய நாம் விலகிடல் வேண்டும்.

யாக்கோபின் பிரியமான குமாரனாகிய யோசேப்பு, தன் உடன்பிறப்புகளின் உக்கிரகோபத்தின் உச்சக்கட்டமாக உதாசீனப்படுத்தப்பட்டு உயிர்சேதம் அடையும் நிலைமாறி, எகிப்திற்கு அடிமையாக கொண்டுபோகப்பட்டான், அங்கு

போத்திபாரின் இல்லத்தரசியின் மூலம் சிற்றின்பம் சிறகடித்து தன்னை நோக்கி வசீகரித்து வந்தபோதிலும் பாவத்தின் வஞ்சகத் தோற்றமறிந்தவனாய், வானையும், மண்ணையும் விசித்திர விநோதமாய் வாயின் வார்த்தையைக் கொண்டு சிருஷ்டித்த வானபராபரனுக்கெதிராய் விக்கினம் விளைப்பதெப்படி என்று விளம்பி, தனக்கு வந்த வில்லங்கத்தின் வில்லொடித்து அவ்விடம் விட்டு விரைந்தோடினான்.

எகிப்தின் மணிமுடிக்கு வந்த சொப்பனத்தின் அர்த்தம் கூறியதால்,*தேவன் பேசினார் இவன் வாழ்கிறான்* என்ற பொருள் கொண்ட *சாப்நாத்பன்னேயா* என்ற பெயரை அரசனால் சூடப்பெற்ற வாலிபனாகிய யோசேப்பு. கர்த்தர் அருவருக்கிற தீய வழியிலிருந்து தீவிரமாயோடினான். தீமையை வெறுப்பதே கர்த்தருக்குப் பயப்படும் பயம் (நீதி.8:13) என்ற வாக்கியத்தை சத்திய ஆவியைக்கொண்டு சாலொமோன் வடிப்பதற்கு பல ஆண்டுகளுக்கு முன்பே இதை நன்கு அறிந்தவனாய் தன் வாழ்க்கையில் சாத்தான் விரித்த சதிவலையிலிருந்து தன்னைக் காத்துக்கொண்டான்.

யானைத் தந்தங்களினால் அரியாசனம் அமைத்து அரண்மனையில் ஆட்சி புரிந்த சாலொமோனுக்குப் பிறகு இஸ்ரவேலின் இராஜ்யம் இரண்டாகப் பிளவடைந்தது.அதில் வடக்கு ராஜ்யமாகிய இஸ்ரவேலின் பத்து கோத்திரத்திற்கு ஏழாவது வேந்தனாக ஆகாப் முடி சூட்டப்பட்டான். அரசனாகிய ஆகாபிற்கு அதிகாரம், ஆசனம், பட்டம், பதவி, மரியாதை மவுசு அனைத்தும் கிடைத்திருக்கும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. எழில்மிகு மாளிகையில் இருந்த ஆகாபிற்கு இவைகள் அதிகமிருந்தபோதிலும், இவ்வரசனின் பார்வை ஒரு எளியவனின் திராட்சைத் தோட்டத்தின் மேல் பட்டது.

அரண்மனையின் சுகங்கள் அனைத்தும் தனக்குக் கிடைத்தபோதும் இந்த அரசன் நாபோத் என்னும் மனிதனின் நிலத்தை அபகரிக்க வேண்டுமென நினைத்தான். தன் இல்லாளன் நினைத்ததை கனகச்சிதமாக முடிக்க நாபோத்தை கொலை செய்தாள் பட்டத்தரசியாகிய யேசபேல் என்னும் பாதகி.***தீமையை விட்டு விலகுவது மூடருக்கு அருவருப்பு*** (நீதி.13:19) என்கிற ஞானக்கூற்றுக்கு ஒப்ப, அரசன் தீமையை நாடி அதைச் செய்ததால் மூடன் என்கிற இழிநிலைக்கு தன்னை விற்றுப்போட்டான் (1.இராஜா.21:25) என்று வேதாகமம் அவனின் அவலநிலை பற்றி விளம்புகிறது.

வாலிபர்களாகிய நாமும் ஆகாபைபோல், ஆணவம் கொண்டு, நமது ஆத்துமாவை இழந்துபோகமால், *ஆண்டவருக்கு பயப்படுவதே ஞானம். பொல்லாப்பை விட்டு விலகுவதே புத்தி.....* (யோபு.28:28) என்பதை உணர்ந்தவர்களாய் யோசேப்பைப் போன்றுபாவம் நல்லது போல பாசாங்கு செய்து பின் படுகுழியில் தள்ளும் என்றறிந்து *நீ உன்னை ஞானியென்று எண்ணாதே; கர்த்தருக்கு பயந்து தீமையை விட்டு விலகு*(நீதி.3:17) என்ற வேத வாக்கியத்திற்கேற்ப தீமையைக் கண்டால் அதைவிட்டுத் தீவிரமாயோடுவோம்.

ஜோ. பிக்கின்ஸ்

# வெளிப்படுத்தின விசேஷம்

## அதிகாரம்: எட்டு

வெளிப்படுத்தல் நூலில் உள்ள முத்திரைகள் திரும்பவும் உடைக்கப்படுவதிலிருந்து எட்டாம் அதிகாரம் ஆரம்பமாகிறது. ஆறாம் அதிகாரம், முதல் ஆறு முத்திரைகள் உடைக்கப்படுவதை விவரிக்கிறது. ஏழாம் அதிகாரம், ஒரு இடைவெளி போன்றது. இப்பொழுது எட்டாம் அதிகாரம், ஏழாம் முத்திரை உடைக்கப்படுவதை விவரிக்கிறது. ஏழாம் முத்திரை உடைக்கப் படும்போது, ஏழு எக்காளங்களோடு ஏழு தூதர்கள் நின்றார்கள். இவர்களில் முதல் நான்குபேர், எட்டாம் அதிகாரத்திலும், ஐந்தாம் ஆறாம் தூதர்கள் ஒன்பதாம் அதிகாரத்திலும், ஏழாம் தூதன் 11-ம்அதிகாரத்திலும் தங்கள் எக்காளங்களை ஊதினார்கள். ஆக, ஏழாம் முத்திரையின் சம்பவங்கள், 8 முதல் 11 அதிகாரங் களடங்கிய, நான்கு அதிகாரங்களில் இடம் பெற்றுள்ளது. எட்டாம் அதிகாரம், முதல் வசனத்தில், ஏழாம் முத்திரை உடைக்கப்பட்டபோது, பரலோகத்தில் ஏற்பட்ட அமைதியானது, அது ஒரு விசேஷமான தருணம் என்பதைக் குறிக்கிறது. பின்வரும் சம்பவங்கள், இது உண்மைதான் என்பதை வலியுறுத்துவதற்கு ஏற்றதாயிருக்கிறது. வசனம் 2-ல் யோவான்,“ *தேவனுக்கு முன்பாக நிற்கிற ஏழு தூதர்களையும், அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட ஏழு எக்காளங்களையும்* ” காண்கிறான். இந்த ஏழு தூதர்களும் தங்கள் பணிகளை வசனம் 6-ல் தொடங்குகிறார்கள்.

வெளி.8:3-ல், ஏழு எக்காளங்கள் ஊதப்படுவதற்கு முன்பாக ஒரு தூதன் (எக்காளங்கள் வைத்திருந்த ஏழுபேரில் ஒருவனல்ல) வந்து, தூபங்காட்டும் பொற்கலசத்தைப் பிடித்து பலிபீடத்தின் படியிலே நின்றான். சிங்காசனத்திற்கு முன்பாக இருந்த, பொற்பீடத்தின் மேல், சகல பரிசுத்தவான்களுடைய ஜெபங்களோடும் செலுத்தும்படி மிகுந்த தூபவர்க்கம் அவனுக்கு கொடுக்கப் பட்டது. அப்படியே “***பரிசுத்தவான்களுடைய ஜெபங்களோடும் செலுத்தப்பட்ட தூபவர்க்கத்தின் புகையானது தூதனுடைய கையிலிருந்து தேவனுக்கு முன்பாக எழும்பிற்று*** ” (வெளி.8:4). வெளி.5:8-ஐப் போன்று, இந்த வசனங்கள், உண்மையுள்ள கிறிஸ்தவர்களுடைய ஜெபங்களுக்கான வல்லமையையும், சக்தியையும் விவரிக்கிறது. தேவனுடைய பரிசுத்தவான் களுடைய ஜெபங்கள் சிங்காசனத்தில் வீற்றிருக்கிற அவருக்கு முன்பாக வருகிறதென்று நாம் காண்கிறோம். துன்மார்க்கருடைய ஜெபங்கள் அங்கே இல்லை.(சங்.66:18; ஏசாயா.59:2யாக்கோபு.5:16,1பேதுரு.3:12, 1.யோவான். 3:22 ஆகிய வசனங்களையும் காண்க). மேலுமாக, நம்முடைய ஜெபங்கள் இயேசுக் கிறிஸ்துவைத் தவிர எந்தவொரு மனிதன் அல்லது தூதன் அல்லது யார்

மூலமாகவும் தேவனிடத்தில் போகத் தேவையில்லையென்பதையும் காண்கிறோம். (யோவான் 14:6;13-14; 1தீமோ.2:5) நாம் ஜெபிக்கும்போது பரிசுத்த ஆவியானவரும் நமக்காக வேண்டுதல் செய்கிறார் .(ரோமர். 8:26-27) சபையென்று சொல்லிக்கொள்கிற அநேக பிரிவினைச் சபைகளுக்கும், மற்ற பல பொய்யான மதங்களுக்கும், தங்களுடைய ஜெபம் அல்லது வேண்டுதல் தேவனிடத்தில் சேருவதற்கு, ஒரு பாதிரியினுடைய மத்தியஸ்தமோ அல்லது மதரீதியான ஒருவரின் பிரதிநிதித்துவமோ தேவைப்படுகிறது. ஆனால், உண்மையான கிறிஸ்தவத்தில் அப்படிப்பட்ட நிலையில்லை. இறுதியாக, பரிசுத்தவான்களின்ஜெபம் பரலோகத்திலுள்ள சிம்மாசனத்தின் மேல் வீற்றிருக்கும் தேவனிடத்தில் சேர்ந்து, அது அவருக்கு சுகந்த வாசனையாக உள்ளதென்பது நாம் தொடர்ந்து ஜெபித்துக் கொண்டேயிருக்க நம்மைத் தூண்டுகிறதாக உள்ளது. நாம் ஜெபிக்கும்போது, நம்முடைய தேவன் நம்மை நேசிக்கிறார்.ஆகையால், இடைவிடாமல் மேலும் மேலுமாக நாம் ஜெபிக்க வேண்டும். (பிலி.4:6, 1.தெச.5:17).

பரிசுத்தவான்களின் ஜெபம் செலுத்தப்பட்டதற்குப் பிறகு, வசனம் 5-ல், அந்தத் தூதன் தூப கலசத்தை எடுத்து, *அதை பலிபீடத்து நெருப்பினால் நிரப்பி, பூமியிலே கொட்டினான். உடனே சத்தங்களும், இடி முழக்கங்களும், மின்னல்களும், பூமியதிர்ச்சியும் உண்டாயின.* தேவனிடத்திலிருந்து மிகவும் வல்லமையான ஒன்று வெளிப்படப்போகிறதென்பதற்கு இது முன்னோடியாக உள்ளதென்று வெளிப்படையாகவே தெரிகிறது. வசனம்-6-ல், *ஏழு எக்காளங்களையுடைய ஏழு தூதர்கள் எக்காளம் ஊதுகிறதற்குத் தங்களை ஆயத்தப்படுத்தினார்கள்.* வசனம் 12 வரை, முதல் நான்கு தூதர்கள் எக்காளம் ஊதினபோது பிரமிக்கச் செய்யும் தத்ரூபமான சம்பவங்கள் ஏற்பட்டது. *முதலாம் தூதன் எக்காளம் ஊதினான்;; அப்பொழுது இரத்தங்கலந்த கல்மழையும் அக்கினியும் உண்டாகி, பூமியிலே கொட்டப்பட்டது; அதினால் மரங்களில் மூன்றிலொருபங்கு வெந்துபோயிற்று, பசும்புல்லெல்லாம் எரிந்துபோயிற்று, இரண்டாம் தூதன் எக்காளம் ஊதினான். அப்பொழது அக்கினியால் எரிகிற பெரிய மலைபோன்றதொன்று சமுத்திரத்திலே போடப்பட்டது; அதினால் சமுத்திரத்தில் மூன்றிலொருபங்கு இரத்தமாயிற்று. சமுத்திரலிருந்த ஜீவனுள்ள சிருஷ்டிகளில் மூன்றில் ஒரு பங்கு செத்துப் போயிற்று; கப்பல்களில் மூன்றிலொருபங்கு சேதமாயிற்று. மூன்றாம் தூதன் எக்காளம் ஊதினான்;அப்பொழுது ஒரு பெரிய நட்சத்திரம் தீவட்டியைப் போல எரிந்து, வானத்திலிருந்த விழுந்தது; அது ஆறுகளில் மூன்றிலொரு பங்கின் மேலும், நீரூற்றுகளின் மேலும் விழுந்தது: அந்த நட்சத்திரத்திற்கு எட்டியென்று பெயர். அதினால் தண்ணீரில் மூன்றிலொருபங்கு எட்டியைப் போலக் கசப்பாயிற்று; இப்படிக் கசப்பான தண்ணீரினால் மனுஷரில் அநேகர் செத்தார்கள். நான்காம் தூதன் எக்காளம் ஊதினான்;அப்பொழுது சூரியனில் மூன்றிலொருபங்கும், சந்திரனில் மூன்றிலொரு பங்கும், நட்சத்திரங்களில் மூன்றிலொருபங்கும் சேதப்பட்டது, அவற்றவற்றில் மூன்றிலொருபங்கு இருளடைந்தது: பகலிலும் மூன்றிலொருபங்கு பிரகாசமில்லாமற்போயிற்று, இரவிலும் அப்படியேயாயிற்று.* (வெளி.8:7-12).

ஏழாம் முத்திரையின் முதல்நான்கு எக்காளங்கள் ஊதப்பட்டபோது நடந்த சம்பவங்களையெல்லாம் தொகுத்துப்பார்த்தால் ஒவ்வொரு எக்காளமும் ஊதப்பட்டபோது, வித்தியாசமான ஒன்று நிகழ்ந்தது என்பதைக்கவனிக்கலாம். முதல் பூமி, இரண்டாவது சமுத்திரம், பிறகு ஆறுகள், நீருற்றுகள், இறுதியாக ஆகாயமண்டலம் இவை ஒவ்வொன்றிலும் மூன்றில் ஒரு பங்கு சேதப்படுத்தப் பட்டது அல்லது அழிக்கப்பட்டது. இப்படிச் சொல்லியிருப்பது, இது உலகத்தின் முடிவு பற்றியோ அல்லது தேவனுடைய இறுதி நியாயத்தீர்ப்பு பற்றியோ விவரிப்பதில்லை என்பதற்கு பலமான சாட்சியாயிருக்கிறது. ஏனெனில், அச் சம யத்தில்,வானமும் பூமியும் வெந்துபோகும்; எல்லா மனிதரும் நியாயத் தீர்ப்புக்குச் சென்றாக வேண்டும். (மத்.25:31-46, 2.பேதுரு 3:10-12) ஆகையால் இந்த வாதைகள் (எகிப்துக்கு எதிரான யாத்திரகம வாதைகளை ஒத்தது) .இந்த பூமியிலிருக்கிற, துன்மார்க்கத்திற்கான தேவனுடைய நியாயத்தீர்ப்பைக் குறிக்கி றதாகத் தோன்றுகிறது. சொல்லர்த்த ரீதியாக, நிறைவேறும்படி இந்த வசனங்கள் கொடுக்கப்படவில்லை. தன்னுடைய பரிசுத்தவான்களின் ஜெபத்தைக்கேட்டு அதற்குப்பதிலாக தேவன், இந்த நியாயத்தீர்ப்பைப் பதிலாகக்கொடுத்திருக்கிறா ரென்பதைக் கவனிக்கும்போது, கிறிஸ்தவர்கள் தங்கள் பாடுகளின் மத்தியில் தேவனை நோக்கிக் கெஞ்சியிருக்கிறார்களென்பதைக் காட்டுகிறது. ஆகவே, ஆறாம் அதிகாரத்தில் உள்ளதுபோல், தேவன், தனது உண்மையுள்ள பிள்ளைக ளுக்காகப் பழிவாங்குகிறார் என்று மீண்டும் ஒரு முறை காண்கிறோம். இந்தக் காரணத்தினிமித்தம் ரோமின் மீதான தேவனுடைய நியாயத்தீர்ப்பு, வசனங்கள் 7-முதல் 12-ல் சொல்லப்பட்டிருக்கிறதென்று சிலர் நம்புகின்றனர். இது ஒருவேளை உண்மையாயிருப்பினும், எல்லா துன்மார்க் கத்திற்கும் எதிரான தேவனுடைய பொதுவான அளவிலான கோபம் மற்றும் கண்டனம் இதில் சொல்லப் பட்டுள்ள தென்று அங்கிகரிப்பது பாதுகாப்பானதாக இருக்கும், பூமி, சமுத்திரம், ஆறுகள், நீருற்றுகள், ஆகாயமண்டலம் என்று இவைகளையெல்லாம் உள்ளடக்கிச் சொல்லப்பட்டிருப்பது, பொல்லாங்கின் மீது தேவனுடைய ஒட்டுமொத்த நியாயத்தீர்ப்பை விளக்குவதாக உள்ளது.

வசனம் 13, நம்மை வரப்போகும் மேலான நியாயத்தீர்ப்புக்கு ஆயத்தப்படுத்தும்படியாய் இவ்வதிகாரத்தை முடிக்கிறது.***“பின்பு, ஒரு தூதன் வானத்தின் மத்தியிலே பறந்துவரக்கண்டேன்; அவன் மகா சத்தமிட்டு: இனி எக்காளம் ஊதப்போகிற மற்ற மூன்று தூதருடைய எக்காள சத்தங்களினால் பூமியில் குடியிருக்கிறவர்களுக்கு ஐயோ, ஐயோ, ஐயோ (ஆபத்துவரும்) என்று சொல்லக்கேட்டான்”***.மூன்று தூதர்கள் இன்னும் எக்காளம் ஊதப் போகிறவர்களாயிருந்தார்கள்.அவர்கள் அப்படிச்செய்யும்போது, மூன்று பெரிய ஐயோ க்கள் இருக்கும். வெளிப்படுத்தல் எட்டாம் அதிகாரத்தில் நாம் கண்டவைகள் துன்மார்க்கருக்கெதிராக நாம் பார்க்கப் போகிற தேவனுடைய மகத் தான நியாயத்தீர்ப்பின் ஒரு சிறு பகுதி தான். தேவ கோபத்தை நமக்கு எதிராகப் பெற்றுக்கொள்ளாமல், இப்பூமிக்குரிய வாழ்க்கையில் பரிசுத்தமாகவும், நீதியா கவும், பக்தியாகவும் வாழ்வதற்கான முக்கியத்துவத்தையும், அவசி யத்தையும் நாம் ஏற்கனவே போதுமான அளவிற்கு விபரமாகப் பார்த்திருக்கிறோம்.

**Jon Macon** **EZSR**

தெரிந்துகொள்ளுங்கள்

கொலோசெயர் 1-ம் அதிகாரத்தில், கிறிஸ்துவை மீட்பர் என்றும், (வசனம்14), சிருஷ்டிகர் என்றும் (வசனம்.15-17), சபைக்குத் தலையாயிருக்கிறார் என்றும்( வச.18) பவுல் தெளிவாக்குகிறார். இவ்வதிகாரத்தில் சகல பரிபூரணமும் அவருக்குள்ளே வாசமாயிருக்கவும், அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி, பூலோகத்திலுள்ளவைகள் பரலோகத்திலுள்ளவைகள் யாவையும் அவர் மூலமாய் தமக்கு ஒப்புரவாக்கிக் கொள்ளவும் அவருக்குப் பிரியமாயிற்று என்று முடிக்கிறார். (கொலோ.1:18,19)

கிறிஸ்துவே சபைக்கு தலையாயிருக்கிறார் எனும் கருத்தை வேறு வசனங்களும் தெளிவாக்குகின்றன. (எபே.1:22,23; 4:15;5:23; கொலோ.2:10) அதாவது அவளுக்கு (சபைக்கு) உயிரோட்டமே அவர்தான். எல்லாம் அவரால் உண்டாயிருக்கிறது என்றும், தெய்வீக அதிகாரத்தின் கீழ் அவர் அவளை (சபையை) ஆளுகிறார் என்றும் பொருள். இக்காரணத்தினால், சரீரத்தின் அனைத்து அவயவங்களும் அவருக்குக் கீழ்ப்படிந்திருப்பது அவசியம். (கொலோ.2:19). இந்த பெரிய உண்மையை நமக்குத் தொடர்பு படுத்தும்படி, கீழ்வரும் சில காரியங்களை நோக்குவோமாக.

## ஒரு தெய்வீகத் தலைமை

சபை கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை தனது தலையாகக் கொண்டிருக்கிறது. அதாவது கிறிஸ்து அவளை (சபையை) ஆளுகிறார் என்று பொருள்படும். சபை பலதலைகளைக் கொண்ட முரணான உருகொண்ட மிருகமல்ல - அது அநேகந்தலைகளைக் கொண்ட சரீரமன்று.அது ஒரே தலையைக் கொண்ட ஒரே சரீரம். கிறிஸ்து தமது அதிகாரத்தை மனிதர்களுக்கு பகிர்ந்தளிப்பதில்லை. காரண, தர்க்க மற்றும் வசனரீதியாக சபைக்கு மனிதத் தலைவர் இல்லை என்பதை முழு உத்வேகத்தில் காணலாம். கிறிஸ்துவிற்கு மாத்திரம் உரிமையுடைய அந்த தலைமைத்துவத்தை எந்தவொரு மனிதனாகிலும் உரிமை கொண்டாடினால், அது தவறான அதிகாரமாகும். கிறிஸ்து சபைக்கு தெய்வீக தலைவர் மாத்திரமல்ல, அவரே (ஒரே) தலைவராயிருக்கிறார்.

## ஒரு தெய்வீக சரீரம்

கிறிஸ்து தமது சரீரமாகிய சபைக்குத் தலையாயிருக்கிறார் (கொலோ.1:18;எபே.1:22,23) மனித சரீரத்திற்கு தெய்வீக தலையோ அல்லது தெய்வீக சரீரத்திற்கு மனித தலையோ இருப்பது, பொருத்தமில்லாதது. எனவே சபை ஒரு தெய்வீக ஸ்தாபனம் என்கிற முடிவிற்கு வருவதை தவிர வேறுவழியில்லை. சபை தேவனுடைய மனதில் உதித்த ஒரு ஸ்தாபனம். ஆதலால், சபை தெய்வீகமானது, (எபே.3:10,11) தீர்க்கதரிசிகளால் முன்னுரைக்கப் பட்டது(ஏசா.2:2-4), இயேசுவால் கட்ட (நிறுவ) ப்பட்டது. (மத்.16-18) அவருடைய

இரத்தத்தால் கிரயத்திற்கு வாங்கப்பட்டது. (அப்.20-28),கிறிஸ்துவின் அப்போஸ்தலர்களின்.மூலம் கிரியை செய்த பரிசுத்த ஆவியானவரின் வழியாக கட்டியெழுப்பப்பட்டது. (அப்.2அதி). இந்த தெய்வீக ஸ்தாபனம் இரட்சிக்கப்பட்ட அனைவரையும் கொண்டு அமைந்தது . (அப்.2:47)அவளது (சபையின்)ஊழியம் இழந்துபோன ஆத்துமாக்களை இரட்சிப்பிற்குள் கொண்டு வருவதுதான் (மாற்.16:15,16).புதிய ஏற்பாட்டில் வெளிப்படுத்தப்பட்டுள்ள தேவனுடைய தெய்வீகப் பிரமாணமே, வழிகாட்டும் ஒரே சட்டமாகும் (2.தீமோ.3:16,17).கர்த்தருடைய சபையின் ஒவ்வொரு அங்கத்தினரும் இந்ததெய்வீக ஸ்தாபனத்தின் அங்கங்களாவர்.

இது, இன்று மனிதர்களால் தோற்றுவிக்கப்பட்டு, மனித பெயரிடப்பட்டு, மனித உபதேசங்களையும், ஆளுகைஅமைப்புகளையும் செயல்பாடுகளையும், மனித தலைமைத்துவத்தையும் மனித சட்டங்களாகிய கட்டளைகளையும் கொண்டு அமைந்துள்ள நாமகரணக் கூட்டங்களுக்கு முரண்பாடானது

## ஒரு தெய்வீக அதிகாரம்

அவளுக்கு (சபைக்கு) ஒரே தலையாயிருப்பதால், கிறிஸ்துவின் சபை ஒரே அதிகாரத்திற்குக் கீழ்ப்பட்டது.வானத்திலும், பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக்கொடுக்கப்பட்டிருக்கிறது என்று இயேசு சொன்னார். (மத்.28:18)அவரது அதிகாரம் அவரது வசனத்தின் மூலம் பயிற்றுவிக்கப்படுகிறது. இப்படியாக ஒருவர் தேவனுடைய வசனத்திற்கு கீழ்ப்படியும்போது, அவர் தன்மை தெய்வீக அதிகாரத்திற்கு் கீழ்ப்படுத்துகிறார். புதிய ஏற்பாட்டுச் சபையில் கூறப்பட்டுள்ள ஒரே அதிகாரம் இது.

அதிகாரம் என்று நாம் கூறும்போது கட்டளைகளைப் பிறப்பிக்கும் உரிமம் பெற்றவர் என்ற பொருளில் கூறுகிறோம். நமது அரசின் நிர்வாகத்தில் பல கிளைகள் இருக்கிறபோதிலும் சரியாக கொண்டு செல்லுகிற ஒரே மாதிரியான நமது நாட்டுச் சட்டங்களுக்கு, நாம் நம்மை பழக்கப்படுத்திக் கொண்டுள்ளோம். சட்டமன்ற கூட்டமைப்பில் சட்டங்களை இயற்றுவதும், அதை பிறப்பிப்பதை ஜானதிபதி அதிகாரத்திலும், அச்சட்டத்தை அமலாக்குவது நீதிமன்றங்களிலும் பொறுப்பேற்றுள்ளன. ஆனால் கர்த்தரின் சபையில் சட்டங்கள் உருவாகிவருவது ஒரே ஒருஅதிகாரத்தின் கீழ் மாத்திரமே, அந்த அதிகாரம் இயேசு கிறிஸ்துவிடமிருந்து வருகிறது.

## ஒரு தெய்வீக நடைமுறை

சபை தனது (தெய்வீக வசனங்கள் மூலமான) தெய்வீக தலைமையைக் கொண்டிருப்பதால் அந்த தலைமையின் கட்டளைகளை மாத்திரமே பின்பற்றுகிறது. ஆதலால் அவரது அனைத்து செயல்பாடுகளும் தெய்வீக நடைமுறையாகும். தேவனுடைய வழி மனிதனுடைய வழிகளைக்காட்டிலும் மேலானது (ஏசா.55:8,9). தன் நடைகளை நடத்துவது மனுஷனாலே ஆகிறதல்ல(எரே.10:23). அதாவது ஒவ்வொரு செயலும் வசனங்களால் நடத்தப்பட்டு,ஒவ்வொரு செயலும் அதிகாரத்திற்குட்பட்டு நடைமுறைப்படுத்தப் படவேண்டும் என்பதுதான்

இதன்பொருள்(கொலோ.3.17.) எல்லாவற்றையும் சோதித்துப்பார்த்து, நலமானதை பிடித்துக்கொள்ளுங்கள் என்று தெளிவாக்குகிறார்(1.தெச.5:21) வசனஅடிப்படையில்சோதித்துஅறியப்படாத காரியங்கள், நடைமுறைப்படுத்த படக்கூடாது என்பதுதான் இதன் எளிமையான கருத்து. ஒருவன் சோதித்து அறியப்பட்டவைகளை பற்றிக்கொள்ளும் போது,சோதிக்கப்படாத மற்ற எல்லாவற்றையும் புறக்கணிக்க வேண்டுவது அவசியமாகிறது. அனைத்து வழிநடத்துதலும் தலைவரிடத்திலிருந்து வருவது அவசியம்.

கர்த்தருடைய சபைக்கு எந்தவொரு மனித ஆலோசனைக் கூட்டங்களும் மார்க்கத்தலைவர்களின் அமைப்பும்,பிரதிநிதிகளின் கூட்டமும்,கோட்பாடுகளும் சரியான அளவுகோலை நிர்ணயிக்க இயலாது.இயேசுவை தலைவராக ஏற்றுக்கொள்ளும்போது அவரது வழிநடத்துதலை பின்பற்றவேண்டும்; அவரை பின்பற்றும்போது, அதுதெய்வீக நடைமுறையாக்கத்தைக் கொண்டுவரும்.

## ஒரு தெய்வீக ஸ்திரத்தன்மை

இயேசு கிறிஸ்து நேற்றும், இன்றும், என்றும் மாறாதவராயிருக்கிறார் (எபி.13:8).ஆதலால், சபையின் தலைமைத்துவமும் மாற்றம் பெறாதது. நூற்றாண்டுகள் தோறும் அவள் (சபை)அதே தலைமையின் கீழ்,ஒரே அதிகாரத்தின் கீழ் இயங்குகிறாள். இருபத்தி மூன்றாம் போப் ஜான் மரித்தபோது, நமது பிராந்திய சபை வாராந்திர பத்திரிக்கையில் கீழ்க்கண்ட நான்கு வரிகளை எழுதினேன்

இருபத்தி மூன்றாம் போப் ஜான் மரித்துவிட்டார்.
ரோமன் கத்தோலிக்க சபைக்கு இப்போது தலைவர் இல்லை.
எனக்குள் இருக்கும் எண்ணத்தை வெளியிடவா?
கர்த்தருடைய சபையின் தலைவர் மரிப்பதே இல்லை.

கவிதை மறைந்துபோம்; சத்தியம் என்றும் மறையாது.

## ஒரு தெய்வீக உறவு முறை

கிறிஸ்துவே சபையாகிய சரீரத்திற்கு தலையாயிருக்கிறபடியால், கிறிஸ்துவையும் சபையையும் பிரிக்க இயலாத அளவுக்கு ஒன்றிணைக்கப்பட்டுள்ளனர். கிறிஸ்து சரீரத்தின் மூலம் கிரியை செய்கிறார், சரீரம் கிறிஸ்துவின் கிரியைகளை நடப்பிக்கிறது. (1.கொரி. 12:12-27; எபே4:11-15;1பேது.4:8-11). எனவே தலையை மறுதலியாமல், சரீரத்தை (சபையை) மறுதலிப்பது இயலாதது. கணுக்களாலும் கட்டுகளாலும் உதவிப்பெற்று இணைக்கப்பட்டு, தேவ வளர்ச்சியாய் வளர்ந்தேறுகிற சரீரமுழுவதையும் ஆதரிக்கிற தலையைப் பற்றிக் கொள்ளாமல்...... (கொலோ.2:18) தமது சரீரத்திற்கு அப்பால் கிறிஸ்துவை பெற்றுக்கொள்ளக்கூடாது.

**முடிவுரை:** சபைக்கு கிறிஸ்துவே தலைவர், ஆளுகை செய்பவர், அதிகாரி, இயக்குநர். ஒருவர் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள விரும்பினால், அவர் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையிலே இருந்தாகவேண்டும்.தலைவரால் கொடுக்கப்படும் கட்டளைகளை நிறைவேற்றவேண்டும். ஒருவர் கர்த்தரை நேசிப்பவராயிருந்தால், சபைக்கு அவரை தலையாக மதிக்கிறவராயிருந்தால், அவர் ஏன் வேற்று ஸ்தாபனங்களில் இருக்க விரும்புகிறார்? வசன ரீதியாக காண்பின், அவர் வேறு ( பிரிவினை) கூட்டத்தில் அங்கம் வகிப்பது எப்படி? இன்னொரு சரீரத்தில் (சபையில்) இருப்பது (கிறிஸ்துவில்லாத ) வேறு ஒரு தலைமைக்கு தன்னை உட்படுத்துகிறார்.

**தமிழில் E.A. ஆறுமுகம்**

# நீங்கள் உங்களுடையவர்கள் அல்லவே

இந்தக் கேள்வி அநேகருக்கு வியப்பாக இருக்கலாம். இந்த உண்மையை அறியாதவர்கள், மது அருந்துவதாலும்,புகைப்பிடிப்பதாலும், போதை வஸ்துக்களை உபயோகிப்பதாலும், விபச்சாரம், வேசித்தனம் போன்ற பல தீய செயல்களை செய்வதாலும் தங்களைக் கெடுத்துக்கொண்டுள்ளனர்.

இப்படிப்பட்டவர்களைச் சந்தித்து ஏன் இவ்வாறு செய்து வருகிறீர்கள் என்று விசாரித்தால், அவர்களிடமிருந்து கிடைக்கும் பதில், என் பணம், என் சரீரம், என் விருப்பம் இதை கேட்பதற்கு நீ யார்? என்று கேட்போரின் வாயை அடைத்துவிடுவார்கள். வேதனை என்னவெனில் சரீரத்தை கெடுத்துக்கொள்ளும் உரிமையுள்ளவருக்கு, கெட்டுப்போன சரீரத்தின் அவயவங்களை குணப் படுத்தவும் கூடுமானால் அவர் கூறும் வார்த்தையை ஏற்றுக்கொள்ளலாம். அந்த த் தகுதி மனுஷனுக்கு இல்லை என்பதை வெளிப்படையாக அறிந்திருக்கும் போது, அதை குணப்படுத்தும் வல்லமையுடையவருக்கே இந்தச் சரீரம் சொந்தமானது என்பதை ஏற்றுக் கொள்வதே நியாயம்.

மனுஷன் மாம்சத்தின் வழியாய் பிறந்தாலும், முடிவிலே மண்ணுக்குத்தான் திரும்புகிறான். நம்முடைய உருவம் இன்னதென்று தேவன் அறிவார் என்றும்; நாம் மண்ணென்று நினைவு கூறுகிறார் என்றும் சங்.103:14ல் தாவீது எழுதுகிறார். ஆம்! சிருஷ்டிப்பின் வரலாற்றில் எல்லா சிருஷ்டிப்புகளையும் வார்த்தையினாலேயே உண்டாக்கின தேவனாகிய கர்த்தர் மனுஷனை பூமியின் மண்ணினாலே உண்டாக்கி, ஜீவ சுவாசத்தை அவன் நாசியிலே ஊதி அவனை ஜீவாத்துமாவாக்கினார் என்று ஆதி 2:7-ல் பார்க்கலாம். தேவன் ஏற்படுத்தின இயற்கை நியதியின் படி மாம்சத்தின் வழியாய் பிறந்தாலும் முடிவிலே மண்ணுக்கு திரும்புவது தேவனு டைய நியமம். ஆதி.3:19-ல் ***நீ பூமியிலிருந்து எடுக்கப்பட்டபடியால் நீ பூமிக்குத் திரும்புமட்டும் உன் முகத்தின் வேர்வையால் ஆகாரம் புசிப்பாய்; நீ மண்ணாயிருக்கிறாய் மண்ணுக்குத் திரும்புவாய் என்றார்.*** எனவே சிருஷ்டிப்பின் படி நீங்கள் தேவனுக்கு சொந்தமானவர்கள் என்றும் நீங்கள் உங்களுடையவர்கள் அல்ல என்றும் அறிந்துகொள்ளுங்கள்.

மேலும் உங்கள் சரீரமானது ***நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நீஙகள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா?*** என்று 1.கொரி.6:19-ல் அப்போஸ்தலனாகிய பவுல் எழுதுகிறார். மேலும் பவுல் எழுதுகிறதாவது: ***பிதாவாகிய ஒரே தேவன் நமக்குண்டு,அவராலே சகலமும் உண்டாயிருக்கிறது. அவருக்கென்று நாமும் உண்டாயிருக்கிறோம்...*** என்று (1கொரி.8:6) மனுஷன் தேவனுடைய மகிமைக்கென்றே உண்டாக்கப்பட்டவனா

யிருந்தாலும் தேவன் அவனைஒரு அடிமையைப் போல நடத்தாமல் அவனுக்கு முழுமையான சுதந்திரத்தையும், நன்மை தீமை இன்னதென்று பகுத்து அறியும் ஆற்றலையும், எல்லாவற்றையும் அனுபவிக்கும் அதிகாரத்தையும் தந்திருக்கிறார். ஆனால் தேவன் மனுஷனை தீமைக்குரியவனாய் உண்டாக்கவில்லை. அவனை செம்மையானவனாக உண்டாக்கினார் என்றும், அவர்களே அநேக உபாயத் தந்திரங்களைத் தேடிக்கொண்டார்கள் என்றும் பிரசங்கி 7:29ல் ஞானி சாலமோன் கூறுகிறார்.

ஆம்! செம்மையாக உண்டாக்கப்பட்ட மனிதன் தேவனால் அவனுக்கு அளிக்கப்பட்டுள்ள சுதந்திரத்தை தீமையான வழிகளில் பயன்படுத்திக் கொண்டு வருகிறான். இதைக் குறித்து அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்தியருக்கு எழுதின நிருபத்தில் ***எல்லாவற்றையும் அனுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு, ஆகிலும் நான் ஒன்றுக்கும் அடிமைப்படமாட்டேன்*** என்று 1 கொரி.6:12 ல் உறுதியாக கூறுகிறார். எனவேமனுஷன் செய்ய நினைக்கும் எல்லா செயலும் அவனுக்கு தகுதியாயிராது என்பதை பவுல் தெளிவாகக் கூறுகிறார் உதாரணமாக சிலவற்றை காண்போம்.

## புகைப்பிடித்தல்

புகைப்பிடித்தல் பழக்கத்திற்கு அநேகர் அடிமைகளாயுள்ளனர். இன்னும் இதனுடைய நிலையைப் பார்த்தால் உண்பதற்கு உணவு இல்லை என்றாலும் பரவாயில்லை புகைப்பிடிக்காமல் இருக்க முடியாது என்று கூறும் அளவிற்கு இத்தீய பழக்கம் மனித சமுதாயத்தில் இடம்பிடித்துள்ளது. புகைபிடிக்கவில்லை என்றால் தங்களுடைய வேலைகளை செய்ய இயலாமல் போவதாக ஒரு மாயையான எண்ணமுடையவர்களாய் அநேகர் காணப்படுகின்றனர். வாலிபர்கள் அநேகர் புகைப்பிடிப்பதை தங்கள் வாழ்க்கையில் ஒரு ஸ்டைலாக நினைக்கின்றனர். இத்தீய பழக்கம் ஒருபாவம் என்று கூறினால் அவ்வாறு வேதாகமத்தில் எங்கே சொல்லப்பட்டுள்ளது என்றும் சிலர் கேட்பார்கள். ஆனால் அப்போஸ்தலனாகிய பவுல் கூறுவதுபோல எல்லாவற்றையும் அனுபவிக்க எல்லாருக்கும் அதிகாரமுண்டு. ஆனால் எல்லாம் தகுதியாயிராது. புகை மனுஷனுடைய சரீரத்திற்குள் செல்வது தகுதியானதல்ல.அது அடுப்பிலும் அல்லது எரிபொருள் பயன்படுத்தப்படும் இடங்களிலும்இருப்பதே தகுந்தது.எரிபொருள் பயன்படும் இடங்களில் ஒரு புதிய புகைபோக்கியே அமைத்தால் அது எவ்வளவு சீக்கிரமாய் பழுதடைந்து பயனற்று போகிறது என்பது எல்லாரும் நல... அறிந்ததே. அப்படியிருக்கும் போது சுத்தமான காற்று பிரவேசிக்க வேண்... மனுஷனுடைய சரீரத்திற்குள் புகை பிரவேசிக்கும்போது மனுஷனுடைய கெட்டுப்போவது நிச்சயமல்லவா. எனவே உங்கள் சரீரம் நீங்கள் தேவ... பெற்றதும் அவர் வாசம்பண்ணவேண்டிய ஆலயமாயிருக்கிறதென்... தேவனுடைய வாசஸ்தலத்தைக் கெடுப்பது பாவமில்லையா? எனவே

மனுஷனுக்கு தகுதியாயிராத புகைப்பிடிக்கும் பழக்கத்தை விட்டுவிடுவது நல்லது. காரணம் இந்த சரீரம் உங்களுடையதல்ல.

## போதை வஸ்துக்கள்

புகைப்பிடிப்பது போன்று போதை வஸ்துக்களுக்கும் மனுஷர் அடிமைகளாயுள்ளனர். இத்தீய பழக்கத்தால் மனுஷன் தன்மானத்தை இழந்து சிறுபிள்ளைகளாலும் புறக்கணிக்கப்படுகிறான். *குடிகாரன் பேச்சு விடிஞ்சா போச்சு* என்று கேலியாக பேசும் நிலைக்கு தள்ளப்படுகிறான். போதையில் மயங்கி விழுந்த ஆதரவற்ற நிலையில் அநாதையாய் கிடப்பவர்கள் எத்தனைபேர். இதைக் குறித்து சாலமோன் ஞானி எழுதுகிறார். ***ஐயோ! யாருக்கு வேதனை? யாருக்கு துக்கம்? யாருக்குச் சண்டைகள்? யாருக்கு புலம்பல்? யாருக்கு காரணமில்லாத காயங்கள்? யாருக்கு இரத்தங் கலங்கின கண்கள்? மதுபானம் இருக்கும் இடத்திலே தங்கித் தரிப்பவர்களுக்கும், கலப்புள்ள சாராயத்தை நாடுகிறவர்களுக்குந்தானே. மதுபானம் இரத்தவருணமாயிருந்து, பாத்திரத்தில் பளபளப்பாய் தோன்றும் போது நீ அதைப்பாராதே, அது மெதுவாய் இறங்கும் முடிவிலே அது பாம்பைப்போல் கடிக்கும், விரியனைப் போல் தீண்டும். உன் கண்கள் பரஸ்திரீகளை நோக்கும் உன் உள்ளம் தாறுமாறான வைகளைப் பேசும். என்னை அடித்தார்கள், எனக்கு நோகவில்லை, என்னை அறைந்தார்கள், எனக்கு சுரணையில்லை, நான் அதைப்பின்னும் தொடர்ந்து தேட எப்பொழுது விழிப்பேன் என்பாய்*** (நீதி.23:29-35)இவைகள் அனைத்திற்கும் மனுஷனுடைய சரீரம் முழுவதையும் சீராக செயல்படவைக்கும் மூளையையும் சரீரத்தின் அவயவங்களையும் போதை வஸ்துக்கள் கெடுத்துப்போடுவதே காரணமாய் இருக்கிறது. தேவனுடைய மகிமைக்குரிய சரீரத்தைக் கெடுத்துப் போடுவது பாவம். எனவே இத்தீய பழக்கத்தை விட்டு விடுவது நலம். காரணம் இந்த சரீரம் உங்களுடையதல்ல.

## வேசித்தனம்

குடிப்பழக்கத்திற்கு அடிமையானவர்கள் பல தீய பழக்கத்திற்கு அடிமையாவது எளிது. நீதி.23:33ல் ***உன் கண்கள் பரஸ்திரீகளை நோக்கும், உன் உள்ளம் தாறுமாறானவைகளைப் பேசும்*** என்று சொல்லப்பட்டுள்ளது. இவ்விதமான தீய பழக்க வழக்கங்களுக்கு அடிமைப்படாமலிருக்க அநேக எச்சரிப்புகள் கொடுக்கப்படுகிறது. இது சம்பந்தமாக வேதத்தில் கொடுக்கப்பட்டுள்ள எச்சரிப்பை பார்ப்போமா. நீதி 5-ம் அதிகாரத்தில், ***பரஸ்திரீயின் உதடுகள் தேன்கூடுபோல் ஒழுகும், அவள் வாய் எண்ணெயிலும் மிருதுவாயிருக்கும். அவள் செய்கையின் முடிவோ எட்டியைப் போலக் கசப்பும், இருபுறமும் கருக்குள்ள பட்டயம்போல் கூர்மையுமாயிருக்கும். அவள் காலடிகள் மரணத்திற்கு இறங்கும்; அவள் நடைகள் பாதாளத்தைப் பற்றிப்போகும்.*** எனவே

சேராதே. சேர்ந்தால் உன் மேன்மையை அந்நியர்களுக்கும், உன் ஆயுசின் காலத்தைக் கொடூரருக்கும் கொடுத்துவிடுவாய். ஆம்! இவ்விதமான தகாத செயல்களினால் இன்று அநேகர் எய்ட்ஸ் எனும் கொடிய வியாதியினால் பாதிக்கப்பட்டவர்களாய் தங்களின் உருவழிந்துபோகும் நிலையில் ஐயோ! புத்திகெட்டுப்போய் இவ்வாறு நடந்து கொண்டேனே போதகத்தை நான் வெறுத்தேனே, கடிந்து கொள்ளுதலை என் மனம் அலட்சியம் பண்ணினதே எனக்கு புத்தி சொன்னவர்களின் சொல்லை நான் கேளாமல் போனேனே என்று துக்கித்து மரணவேதனையில் இருப்போர் எத்தனைபேர். இந்நிலை தவிர்க்கப்பட வேண்டுமானால் வேத வசனத்திற்கு செவிகொடுங்கள். 1. கொரி.6:18-ல், ***வேசித்தனத்திற்கு விலகியோடுங்கள் மனுஷன் செய்கிற எந்தப் பாவமும் சரீரத்திற்குப் புறம்பாயிருக்கும், வேசித்தனஞ் செய்கிறவனோ தன் சுயசரீரத்திற்கு விரோதமாய் பாவஞ் செய்கிறான்*** என்று பவுல் கூறுகிறார். ***பிறனுடைய மனைவியினிடத்தில் பிரவேசிப்பவனும் அப்படியே அவளைத் தொடுகிற எவனும், ஆக்கினைக்குப் தப்பான்*** என்று நீதி 6:29ல் சாலமோன் எழுதுகிறார்.

நமக்கு விரோதமாக அல்லது நம்முடைய உடைமைகளுக்கு விரோதமாக யாரேனும் தீங்கு செய்வதை நாம் சற்றேனும் பொறுத்துக் கொள்வதில்லை. ஆனால், மேற்சொன்ன தீய செய்கைகளினால் நாம் நம்மைக் கெடுத்துக் கொள்வதில் சற்றேனும் தயக்கமில்லாமலிப்பது ஏனோ! நான் என்ற எண்ணமோ? இல்லை! நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் நீங்கள் தேவனுக்கு சொந்தமானவர்கள் என்றும் வேதத்தில் தெளிவாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.எனவே இந்த சரீரத்தை கெடுத்துப் போட எவருக்கும் அதிகாரமில்லை. எனவே இந்த சரீரத்தை கெடுத்துப் போட எவருக்கும் அதிகாரமில்லை. எனவே நாம் நமக்கே பிரியமாய் நடவாமல் தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறிந்து உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு அப்போஸ்தலனாகிய பவுல் ரோமர்.12:1-ல் உங்களையும் வேண்டிக்கொண்டுள்ளார். எனவே நீங்கள் உங்களை தேவனுக்கு ஒப்புக்கொடுங்கள் என்று அடியேனும் பணிவாய் வேண்டிக்கொள்கிறேன். சமாதானத்தின் தேவன் தாமே உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக, உங்கள் ஆவி, ஆத்துமா, சரீரம் முழுவதும் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வரும்போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக. ஆமென்!

**சகோ. ஹென்றிமோகன்**



## நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது.

விசுவாசமுள்ள தேவபிள்ளைக்கு பரலோக வீட்டைப் பற்றிய வாக்குத்தத்தமும், தியானமும், நல்ல போராட்டத்தைப் போராடுவதற்கும், ஓட்டத்தை முடிப்பதற்கும், விசுவாசத்தை காத்துக்கொள்வதற்கும் (2தீமோ.4:7) தேவையான ஊக்கத்தையும், உத்வேகத்தையும் தரும். பரமவீட்டை எதிர்நோக்குகிற இருதயங்களிலிருந்து, *மாலை மயங்கிவரும் வேளையில் எனக்காக பாடுங்கள் பரலோகத்தை குறித்தான எல்லாப் பாடங்களிலும் இனிமையானதொரு பாடலைப் பாடுங்கள்* என்ற ஆழ்ந்த சிந்தனை வெளிப்படுவது இயற்கையே.

இந்தப் பாழ்ப்பட்ட உலகத்தைவிட்டுப் பிரிந்து, கர்த்தரோடு வாழ்வது ***அதிக நன்மையாயிருக்கும்*** (பிலி.1:23) என்று நமது சகோதரனாகிய பவுல் நன்றாய் அறிந்திருந்தார். மீட்கப்பட்டோர்-***தங்கள் கிரியையிலிருந்து இளைப் பாறுகிறபடியால்*** (வெளி.14:13) கண்ணீரின் பள்ளத்தாக்காகிய இவ்வுலகத் தையும் நம் கண்ணீரெல்லாம் துடைக்கப்படும் அந்த விண்ணுலக வீட்டையும், சற்றேனும் ஒப்பிட்டுப்பார்க்கவே முடியாது.(வெளி.21:4). ***பூமிக்கடுத்த வைகளை சிந்திக்கிறவர்களிடமிருந்து*** (பிலி.3:19) வித்தியாசப்பட்டவர்களாய், கிறிஸ்தவர்கள் மேலான நகரத்தின் பிரஜைகள் என்பதில் களிகூறுகிறார்கள். (எபி.11:16). பிலி.3:20-ல் சொல்லப்பட்ட ஆறுதலான மற்றும் அழகான உண்மைகள் நம்முன் உயரிய சவால்களையும் நிறுத்துகிறது.

நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது. அங்கேயிருந்து கர்த்தராயிருக்கிற இயேசுகிறிஸ்து என்னும் இரட்சகர் வர எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

**கீழ்வருகிற செய்திகளை கவனமாய் ஆராய்ந்து பாருங்கள்:-**

1. தேவனுடைய ஜனங்களின் இளைப்பாறுதலின் வீட்டை நித்தியமாய் இழந்து போகாதபடி (எபி.4:1-11) பரமவீட்டின் பிரஜைகள் தங்கள் எண்ணத்தையும், நடக்கையையும் கட்டுப்படுத்திக் கொள்ளவேண்டும்(1.பேதுரு.1:4) நாம் இந்த பூமியில் அந்நியரும் பரதேசிகளுமாயிருக்கிறோம் என்பதை நினைத்து பேதுருவின் ஆலோசனைக்கு செவிகொடுக்கவேண்டும்.

> ***பிரியமானவர்களே, அந்நியரும் பரதேசிகளுமாயிருக்கிற நீங்கள் ஆத்துமாவுக்கு விரோதமாய் போர்செய்கிற மாம்ச இச்சைகளை விட்டு விலகி*** (1பேதுரு.2:11)
>
> ***இவ்வுலகம் என் வீடல்ல - நான் கடந்து போகிறேன்.... இந்த உலகம் என் வீடென்று இனி கொஞ்சமும் எண்ணேன்.*** என்று திடநம்பிக்கையுடன் பாடுகிறோம்.

கடந்துபோகிற உலகத்தோடு கலந்துவிடவேண்டாம் என்று வேதவாக்கி யங்கள் மீண்டும் மீண்டும் நம்மை எச்சரிக்கிறது. ***உலகத்திலும் உலகத்திலுள்ளவை களிலும் அன்புகூராதிருங்கள்...*** (1யோவா.2:15).ஆனாலும் பரலோக நகர பிரஜைகள் சிலவேளையில் வழிவிலகி, அந்நிய தேசமாகிய இந்த பூமியின் காரியங்களில் வேர்விட்டு நிலைத்துவிடுகிறார்கள். மேலான வீடு மற்றும் தோட்டம் என்பதெல்லாம் பத்திரிக்கையின் தலைப்புகளாக மாத்திரமாயிராமல், காலத்தால் அழிந்துபோகிற பொக்கிஷங்களை - அதாவது பூமிக்குரிய பொக்கிஷங்களை அறிவின்மையாலும், வெறுமைக்காகவும் சேர்த்துவைப்பதினால் நம்முடைய இலக்கை தவறவிடக்கூடாது என்பதற்கு சரியான ஆலோசனையாகவும் இது திகழ்கிறது. (மத்.6:19-21) சில சகோதர சகோதரிகள் நிலையில்லா ஐசுவரியத்தின், தற்கால சந்தோஷத்திற்காக பரலோக குடியிருப்பையே விற்றுப்போடுகிறார்கள் என்பது தெளிவாய் தெரியவருகிறது.(1.தீமோ.6:17)ஆனாலும் 100 வருடங்களில், இவை எல்லாம் என்னவாகும்?

***உலகத்திலே நாம் ஒன்றும் கொண்டு வந்ததுமில்லை, இதிலிருந்து நாம் ஒன்றும் கொண்டுபோவதுமில்லை என்பது நிச்சயம்*** (1.தீமோ.6:7)

இம்மைக்குரிய காரியத்திற்காக மற்றும் ஒருவேளை போஜனத்திற்காக தன் சேஷ்டப்புத்திர பாகத்தை விற்றுப்போட்டவன் ஏசா ஒருவன் மாத்திரமல்ல.

2. பரலோக நகரத்தின் பிரஜைகள், இரட்சகரின் மகிமையான வெளிப்பாட்டிற்காக காத்துக்கொண்டிருக்கிறார்கள். கிங் ஜேம்ஸ் மொழியாக்க ஆங்கில வேதம் நாம் இரட்சகர் வர பார்த்துக்கொண்டிருக்கிறோம் என்கிறது. இந்த வார்த்தை மூலபாஷையிலே நம் ஆண்டவர் வருகைக்கு ஆவலாய் காத்துக் கொண்டிருக்கிறோம் என்ற அர்த்தத்தை தருகிறது.

சில பேர் யாருக்காவது காத்துக்கொண்டிருக்கையில், நேரத்தை வீணாய் போக்குகிறார்கள், ஆனால் கிறிஸ்தவர்களுக்கு வீணாக்குவதற்கெல்லாம் நேரமில்லை! நாளானது கடந்து போகிறது, செய்வதற்கும் பணி அதிகமாயி ருக்கிறது. (யோவா.9:4). நாம் அறியாத நாளுக்காகவும், நாழிகைக்காகவும்- அவரின் வருகைக்கு காத்துக் கொண்டிருக்கையில் - (மத்.24:36)- நம்முடைய அவசர மற்றும் கவனமான முயற்சிகள் தேவைப்படுகிற காரியங்கள் இருக்கத்தான் செய்கிறது.

1. தனி ஆராய்ச்சியும் - தியானமும் நமது அநுதின கவனத்தை பெற்றிடவேண்டும். (2.பேதுரு.3:18;2தீமோ.2:15)
2. நம்மை சந்திக்கிறவர்களிடம் சுவிசேஷத்தை எடுத்துச்சொல்லுவது நமது இரடசகர் வர காத்திருக்கும் நமது நேரத்தை பிரயோஜனமாய் நிறைவுபடுத்துகிறது.(மாற்கு 16:15)
3. காலம் இருக்கிறபோதே, வழிவிலகி தவறிழைக்கிற சகோதரர்களை மீண்டும்

தேவனிடத்தில் திருப்பினால், பரலோகத்தின் ஜனத்தொகையை அது அதிகப்படுத்தும்.(யாக்.5:19,20).

4. வரப்போகிற நியாயத்தீர்ப்பை மனதில் கொண்டு பார்த்தால் - ஞானமுள்ள பெற்றோருக்கு, தங்கள் பிள்ளைகளை தேவனுடைய வழியில் நடத்துவதே முதன்மையான நோக்கமாயிருக்கிறது.(உபா.6:6-7;எபே.6:4)

5. சமாதானத்துக்கடுத்தவைகளை நாடுகிறவர்களாக...(ரோமர்.14:19) நாம் இருக்கிறபடியால் நம் இரட்சகருக்காக காத்துக்கொண்டிருக்கிற வேளையில் சகோதரர்கள் ஒருபோதும் கலகங்கள் உண்டுபண்ணாமல், சமாதானம் செய்கிறவர்களாய் இருக்கவேண்டும். (மத்.5:9;ரோமர் 12:18)

6. ஒவ்வொரு நாளும், நமது இரட்சகரைப்போல் மாறுவதில் என்ன முன்னேற்றம் கண்டிருக்கிறீர்கள்? உங்கள் பரலோகப் பயணம் கனிஉள்ளதாக இருக்கும்படி (2.பேதுரு.1:8)நற்குணங்களை *கூட்டி வழங்கி* இருக்கிறீர்களா? (2.பேதுரு.1:5-7).

நாம் ***கறையற்றவர்களும் பிழையில்லாதவர்களுமாய்***, இருக்க வேண்டும் என்கிற உறுதியான முடிவுடன் நமது இரட்சகர் வருகைக்காக பொறுமையுடன் காத்திருக்கிறோம்(2.பேதுரு.3:14) நமது குடியிருப்பு - ***காணியாட்சி*** - பரலோகத்தில் இருக்கிறபடியால், அழிவும், நோயும், துக்கமும் முந்திய நாட்களுக்குரியதாய் போகிற நமது நித்திய வீட்டை வாஞ்சிக்கிறோம். (2.கொரி.5:1-4) கடந்தநாட்களின் பரிசுத்தவான்களுடன் நாமும் சேர்ந்து கர்த்தராகிய இயேசுவே வாரும் என்றும் கூறுகிறோம்.(வெளி.22:20).

நமது மனிதப் பயணத்தை இன்னும் முடிக்கவில்லை. நமது குடியிருப்பு பரலோகத்திலிருக்கிறது. நாட்கள் பறந்தோடிப்போகிறது. அவைகள் வருடங்களாக மாறுகிறது. நமது ஜீவியம் ஒரு கதையைப்போல முடிகிறது. அருமையான சகோதரனே, சகோதரியே, நீங்கள் பரலோகம் போக விரும்பவில்லையா? அதற்கு ஆயத்தமாய் இருக்கிறீர்களா? எக்காளம் தொனிக்கையில் இரட்சகரை சந்திக்க ஆயத்தமாய் இருக்கிறீர்களா? சோர்ந்துபோகாமல் விசுவாசமுள்ளவர்களாயிருங்கள். சாத்தானோடு போரிடுகிற நாம் சீக்கிரமாய் நமது படைகலன்களை கலைந்து அவரது வருகையின் போது பரலோக வீட்டில் இளைப்பாறுவோம்.

Lynn Parker

# இயேசுவின் குரலைக் கேட்போம்.

நான் சத்தியத்தை பின்பற்றுகின்றேனா? என்ற கேள்விதான் இன்றைய மதவட்டாரங்களின் மத்தியில் ஒரு முக்கிய பிரச்சினையாய் இருக்கிறது. சத்தியத்தில் நடப்பது மிக முக்கியம் வாய்ந்தது, ஏனெனில் சத்தியத்தில் நாம் நடக்க வில்லையென்றால் தேவனுடைய ஐக்கியத்திலிருந்து பிரிந்து நிற்கிறோம் என்று பொருள். *நாம் அவரோடே ஐக்கியப்பட்டவர்களென்று சொல்லியும், இருளிலே நடக்கிறவர்களாயிருந்தால், சத்தியத்தின்படி நடவாமல் பொய் சொல்லுகிறவர்களாயிருப்போம்.* (1.யோவா.1:6) மேலும் சத்தியம் எப்பொழுதும் கிரியைகளுடன் இணைந்திருக்கிறதாகவே இருக்கிறது. நாம் சத்தியத்தில் நடக்கவேண்டும் என்பதன் பொருள் நாம் சத்தியத்தின்படி செய்கிறவர்களாய் இருக்கவேண்டும் என்பதாகும்.

நாம் சத்தியத்தில் நடக்கிறோம் என்பதை எப்படி அறிவது? சத்தியம் நம்மை விடுதலையாக்குவதால், அதை நாம் சரியாய். தெளிவாய், முறையாய் வேதாகம வசனங்களின் துணை கொண்டு மாத்திரமே அறிந்து கொள்ள முடியும். ஆனால் சிலரோ இதை நாம் அறிந்து கொள்ள முடியாது என்கிறார்கள். இன்னும் சிலரோ நம்முடைய உணர்வுகளால் இதை அறிய முடியும் என்றும், தேவனிடத்திலிருந்து நேரிடையாக சொப்பனத்தின் மூலமோ, தரிசனத்தின் மூலமோ அல்லது மெல்லிய சத்தத்தின் மூலமோ இந்த அறிவு வருகிறது என்று வாதிடுகிறார்கள். ஆனால்,நமது கேள்வியெல்லாம் என்னவெனில் இவர்கள் சொல்லுகிற மேற்கண்ட முறைகளின் மூலம் நாம் சத்தியத்தைத் தான் ஊறுதியாய் அறிகிறோமா என்பது தான்? ஏனெனில் சாத்தானும் ஒளியின் தூதனின் வேஷத்தை தரித்துக்கொள்ளமுடியும் என்று வேதாகமம் சொல்லுகிறதே.

இதற்குத் தேவையான சரியான விடைக்கு நாம் மீண்டும் நமது ஆண்டவரிடம் திரும்புவது அவசியம். பிலாத்துவின் விசாரணையின்போது நமது ஆண்டவர் கூறியதை சற்று கவனியுங்கள்.... *சத்தியத்தைக் குறித்துச் சாட்சிகொடுக்க நான் (இயேசு)பிறந்தேன். இதற்காகவே இந்த உலகத்தில் வந்தேன்; சத்தியவான் எவனும் என் சத்தம் கேட்கிறான் என்றார்.*(யோவா.18:37)

நீங்கள் சத்தியத்தில் நடப்பீர்கள் என்றால் கீழ்வரும் காரியங்களில் நமது இரட்சகராகிய இயேசுவின் இனிய குரலுக்கு உங்கள் செவியை சாய்ப்பீர்கள் என்பது உறுதி.

1. ஞானஸ்நானத்தைக் குறித்து அவரின் குரலைக் கேட்போம்.

*விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான். (மாற்கு 16:16).*

2. ஆத்தும ஆதாயத்தைக் குறித்து அவரின் குரலைக்கேட்போம்.

*என் பின்னே வாருங்கள், உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர் களாக்குவேன்.* (மத்.4:19).

*... அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம்; ஆதலால், அறுப்புக்கு எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக்கொள்ளுங்கள்.* (மத்.9:37,38)

3. கொடுப்பதைக் குறித்து அவரின் குரலைக்கேட்போம்.

*... வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம்...* (அப்.20:35).

*கொடுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து, உங்கள் மடியிலே போடுவார்கள்; நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்களோ அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும்.* (லூக்கா 6:38)

4. ஜெபத்தைக் குறித்து அவரின் குரலைக் கேட்போம்.

*சோர்ந்து போகாமல் எப்பொழுதும் ஜெபம் பண்ணவேண்டும்.* (லூக்கா 18:1)

*நீயோ ஜெபம் பண்ணும் போது, உன் அறைவீட்டுக்குள் பிரவேசித்து உன் கதவைப்பூட்டி, அந்தரங்கத்தில் இருக்கிற உன் பிதாவை நோக்கி ஜெபம் பண்ணுங்கள்... (மத்.6:6)*


5. கீழ்ப்படிதலைக் குறித்து அவரின் குரலைக்கேட்போம்.

*நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள்.* (யோவா.14:15)

*நான் உங்களுக்குக் கற்பிக்கிற யாவையும் நீங்கள் செய்வீர்களானால், என் சிநேகிதராய் இருப்பீர்கள்.* (யோவா.15:14)

பரலோக பதவியைத் துறந்து அடிமையின் ரூபமெடுத்த நமது ஆண்டவர், இப்பூமிக்குரிய தமது ஜீவியத்தில் ஒலித்த உன்னத குரலை இப்பொழுது வேதாகம வசனத்தின் மூலமாய் கேட்டு இருக்கிறீர்கள். நீங்கள் சத்தியத்தின் படி நடக்கிறவர்களாய் இருந்தால் கேட்பதோடு நில்லாமல் கிரியையுள்ள விசுவாசத்தை நடப்பிக்கிறவர்களாக அவருடைய சித்தத்திற்கு உங்களை ஒப்புக்கொடுத்து, மனந்திரும்பி, இயேசுவை தேவ சுதன் என்று இரட்சிப்புண்டாக உங்கள் வாயினாலே அறிக்கை செய்து, திருமுழுக்கின் வாயிலாக அவருக்குக் கீழ்ப்படிந்து பாவங்கள்ள விட்டு விலகுங்கள்.

தமிழில் ஜே.பி.



# HEAR THE VOICE OF TRUTH
## ON RADIO SRILANKA

| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 8.45 -9.00<br>9.00 - 9.15 | Box.3815<br>New Delhi -110049 | SUNNY DAVID |
| ENGLISH | Friday | 7.45 - 8.00 | Box.3815<br>New Delhi -110049 | J.C. CHOATE |
| TELUGU | Sun,Mon<br>Tue, Thu | 2.00 -2.15 | Box . 80<br>Kakinada -533 001 | JOSHUA<br>GOOTAM |
| TAMIL | Sunday<br>Tuesday<br>Thursday<br>Friday | 6.45 - 7.00<br>5.30 - 5.45<br>5.45 - 6.00<br>5.30 - 5.45 | Box . 8405<br>Bangalore - 560 084 | P.R.SWAMY |
| MALAYALAM | Friday | 3.45 - 4.00 | Sunny Meads Lane,<br>Behind Sanskrit<br>College,<br>Trivandrum -695 034 | P.K.VARGHESE |
| KANNADA | Sunday | 1.45 - 2.00 | Box.448<br>Bangalore - 560 004 | ROBERT<br>RATHNAKAR |

***Please write to these address for Bible Correspondence Course***

***Magazines and other Christian Literatures***

**ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST**

REGISTERED NEWS PAPER
RNI No. 47661 / 87 - NEW DELHI

## அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்றுக்கொள்ள விரும்புவோருக்கு ஓர் இனிய செய்தி.

ஆம், மிகத் தேர்ந்த முறையில் ஒழுங்கு செய்யப்பட்ட, அஞ்சல் வழி வேதாகமப் பயிற்சியில் நீங்கள் விரும்பினால் சேர்ந்து பயன் பெறலாம். இது 15 பாடங்களைக் கொண்ட ஓர் இலவசப் பயிற்சி. இப்பயிற்சியை வெற்றிகரமாக முடிப்பவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும்.

பயிற்சியில் சேர விரும்புவோர்
தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

இயக்குநர்,
**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி,**
த.பெ.எண் – 27, காங்கேயம் – 638 701.

வெளியிடுவோர்
**கிறிஸ்துவின் சபையார்,**
தாராபுரம் ரோடு, காங்கயம் – 638 701
தமிழ்நாடு, இந்தியா
✆ 04257-20030

**Published by Church of Christ, Kangayam.**
**Printed at Konar Printers, Madurai. Editor : S. RAJANAYAGAM,**